பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இனி நூலகம்.

வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு
எவர் விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 02 புதன்கிழமை (19 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 329

உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறையிலான வீடியோ
படப்பிடிப்பிற்கு
எவர் விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

## முச்சந்தி முரளி



காமினியாரின்ரை ஊழல் பட்டியல் நீண்டு கொண்டே போகும் போலை...!

# 2 ஆம் கட்டப் பேச்சுக்கள் திங்களன்று யாழ் நகரில்!

கொழும்பு, ஒக். 19

விடுதலைப் புலிகளுக்கும் அரசக் குழுவினருக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என நேற்று கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்டபடி முதல் கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்து பத்து நாட்களின் பின்னர் இரண்டாம் கட்டப் பேச்சுகள் நடைபெறவிருக்கின்றன.

முதற்கட்டப் பேச்சுகளுக்குச் சென்ற அரச பிரதிநிதிகளுடன் அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், ஜி.எல். பீரிஸ், அனுருத்தை ரத்வத்த ஆகியோரில் இரண்டொருவர் அல்லது மூவரும் இரண்டாம் கட்டப் பேச்சுகளில் பங்குபற்றக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலாம் கட்டப் பேச்சுகளின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக—

அரசின் ஆலோசனைகளும் தீர்வும் இரண்டாம் கட்டப் பேச்சுக்குச் செல்லும் அரசப் பிரதிநிதிகளால் எடுத்துச் செல்லப்படும் என விஷயமறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிங்களத் தினசரியான 'தினமின' செய்தி வெளியிட்டுள்ளது. (உ-எ-4-6)

## லஞ்சம், ஊழல் தொடர்பாக
# காமினி மீது குற்றச்சாட்டு: இரு கோவைகள் சிக்கின!

கொழும்பு, ஒக். 19

ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திஸநாயக்காவுக்கு எதிரான— லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக் கோவைகள் இரண்டு அரசாங்கத்திடம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான ஆரம்ப விசாரணைகளை பிரதிப் பொலீஸ் மா அதிபர் சந்திரா ஜெயவர்த்தனா நடத்தியுள்ளார்.

★ கொத்மலை நீர்த்தேக்க திட்டப் பகுதியில் இருந்த தமது காணி ஒன்றை மகாவலி. அமைச்சுக்கு 14 லட்சம் ரூபாவுக்கு விற்று பணம் பெற்றுக் கொண்டமை.

★ அந்தப் பகுதியில் ஐந்து ஏக்கர் காணியை ஜனாதிபதியின் விசேட ஆணையின் கீழ் தனதாக்கிக் கொண்டமை.

★ மகாவலி அபிவிருத்திச் சபையின் ஒப்பந்தக்காரர் ஒருவர் மூலம் அக்காணியில் பெரிய வீடு ஒன்றைக் கட்டியமை.

★ தமது சொத்து தொடர்பாக 1977 இல் செய்து கொண்ட பிரகடனத்துக்கும் 1990 இல் அவரிடம் இருந்த சொத்துகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் முறை தவறிய வழியில் அவர் பெரும் பணம் சம்பாதித்துள்ளார் என்பதை நிரூபித்துள்ளமை.

— மேற்படி குற்றச்சாட்டுகளே காமினிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன.

இக் குற்றச்சாட்டுகள் சம்பந்தமான கோவைகள்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப் பாதையை திறப்பது குறித்து இன்று அமைச்சரவை முடிவு செய்யும்

## உத்தியோகப்பற்றற்ற முறையில் நேற்றுக் கூடி விரிவாக ஆராய்வு

கொழும்பு ஒக்ரோபர். 19

கேரதீவு — சங்குப்பிட்டி ஊடான பூநகரிப் பாதையை மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்துவிட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் கோரிக்கை குறித்து ஸ்ரீலங்கா அமைச்சரவை இன்று கூடி முடிவு செய்யும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள் நேற்று உத்தியோகபற்றற்ற முறையில் கூடி இந்த விடயம் குறித்து ஆராயவிருந்தனர்.

அமைச்சரவை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமையில் இன்று கூடும்போது பூநகரிப் பாதை குறித்து அமைச்சரவையின் முடிவு உத்தியோக பூர்வமாக எடுக்கப்படவிருக்கிறது.

அதேசமயம்—

பூநகரிப் பாதையை மக்களின் பாவனைக்காகத் திறந்துவிடுதல் உட்பட விடுதலைப் புலிகளுடன் அரசுப் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுக்களின் விவரங்கள் குறித்து அமைச்சரவை உறுப்பினர்களில் ஜனாதிபதி விஜேதுங்காவைத் தவிர ஏனையோர் நேற்று ஒன்று கூடி கலந்தாலோசிக்கவிருந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பூஸா தடுப்பு முகாமுக்கு விரைவில் மூடு விழா!

கொழும்பு, ஒக். 19

காலியில் உள்ள பூஸா தடுப்பு முகாம் விரைவில் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுவிட்டனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் எச். ஜி. தர்மதாஸ தெரிவித்தார். (உ-எ)

## மழை காலத்தில் பூநகரிப் பாணியில்
# பாரிய தாக்குதலை நடத்த புலிகள் திட்டமாம்
## கொழும்பு வார இதழ் ஹேஸ்யம்

வரப்போகும் பருவப் பெயர்ச்சி மழையுடன் ஆயுதப்படையினருக்கு எதிராக புதிய தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுவருவதாக அறிக்கைகள் தெரிவிப்பதாக ' சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் அரசியல் செய்தியாளர் தமது கண்ணோட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

பூநகரிப் பாணியில் பாரிய தாக்குதல் ஒன்றை மன்னார், பூநகரி மற்றும் ஆனையிறவு ஆகியவற்றை இலக்குவைத்து விடுதலைப் புலிகள் நடத்துவார்கள் என்றுப் எதிர்பார்க்கப்படுவதாகவும் அக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

# ஈ. பி. டி.பியின் ஆதரவும் பிரதமர் சந்திரிகாவுக்கு!

கொழும்பு, ஒக். 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளரான பிரதமர் சந்திரிகாவை ஆதரிக்கப் போவதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

ஏனைய தமிழ்க் கட்சிகளை பின்பற்றி தமது கட்சியும் சந்திரிகாவை ஆதரிக்கும் என்று ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்,

கடந்த அரசாங்கக் காலத்தில் ஈ.பி.டி.பி. ஐக்கிய தேசியக் கட்சியுடன்கை கோர்த்து செயல்பட்டு வந்தது தெரிந்ததே. (உ-எ)

## 700 பஸ்கள் இறக்குமதி

கொழும்பு, ஒக். 19

புதிதாக 700 பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

பஸ்சேவையை சீரமைக்கும் நோக்குடன் புதிய பஸ்கள் இறக்குமதி செய்யப்படவிருப்பதாக இ.போ.ச. தலைவர் ரமல் சிறிவர்த்தனா தெரிவித்தார். (ஒ-6)

## போர் நிறுத்தம்: ஆராய்வதற்கு உயர்நிலை குழு

கொழும்பு, ஒக். 16

போர் நிறுத்தம் பற்றி விடுதலைப் புலிகள் விடுத்துள்ள கோரிக்கை குறித்து ஆராய உயர் நிலைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும்—

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கலந்து கொள்வார் என்றும் அதிகாரபூர்வ செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

# மீனவர்கள் 9 பேரை புலிகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 19

அரசுக்கு தமது நல்லெண்ணத்தை வெளிக்காட்டும் ஒரு நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் நேற்று 9 மீனவர்களை விடுதலை செய்தனர்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இது தொடர்பான வைபவத்தில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கே. கரிகாலன், கடற்புலிகளின் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. மு.வே.யோ. வாஞ்சிநாதன், கடற்புலிகளின் நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு.மறவன், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரி பேர்க்கின்ஸ் மற்றும் நிர்வாகப்பிரிவு அதிகாரி திரு. நடராசா, திரு. மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுவிக்கப்பட்ட 9 பேரையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் பொறுப்பேற்றுக் கொண்டனர்..

# தவறான பிரசாரம் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையையே எற்படுத்தும்
## நேற்றைய விடுவிப்பு வைபவத்தில் கரிகாலன்

யாழ்ப்பாணம், ஒக். 19

பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இங்கு வருகை தந்திருந்த அரச பிரதிநிதிகள் நால்வரில் ஒருவரான திரு. பாலபட்டபெண்டி 18 யுத்தக் கைதிகள் விடுதலை செய்யப்பட இருப்பதாகத் தெரிவித்தபோது, நாம் அவர்களின் பெயர் விவரங்களைக் கேட்டோம்.. விடுதலை செய்யும் போது பெயர் விவரம் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் பின்னர் விடுதலை செய்யப்பட்ட 18 பேரும் அப்பாவிகள். இவர்களை விடுதலை செய்து விட்டு ஸ்ரீலங்கா அரசின் வானொலியும் பத்திரிகைகளும் இந்த 18 பேரும் விடுதலைப் புலிகள் என்று பிரசாரம் செய்தன. அரசின் தவறான பிரசாரம் மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு அவநம்பிக்கையையே ஏற்படுத்தும்.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றுலாப் பயணிகள் போல் நாம் நடத்தப்பட்டோம்
### விடுவிக்கப்பட்ட மீனவர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 19

கடந்த மே மாதம் 8 ஆம் திகதி கற்பிட்டிக் கடலில் வைத்து புலிகள் என்னைக் கைதுசெய்தனர். புலிகள் என்ன செய்வார்களோ என்று பயந்த படியே சென்றேன். ஆனால் நினைத்தது போல எதுவும் நடக்கவில்லை. சுற்றுலாப் பயணிகள் போலவே நாம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டோம்.

நேற்று விடுவிக்கப்பட்ட 9 மீனவர்களில் ஒருவரான புத்தளத்தைச் சேர்ந்த எம். பாக்கீம் என்பவர், உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

புலிகளிடம் பிடிபடுவதற்கு முன்னர் ஒரு சமயம் தாம் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகவும்—

அவர்களது சித்திரவதைக்கு உட்பட்டதால் ஒரு கை இயங்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும்— அவர் தெரிவித்தார். புலிகளிடம் சிக்கிய தம்மை மீனவர் [illegible] நடத்தினர் வந்ததாகவும் அவர் தெரிவித்தார். (இ-9)

## விடுதலையானோர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 19

விடுதலைப்புலிகளினால் நேற்று விடுவிக்கப்பட்ட ஒன்பது பேரும் வருமாறு:-

★ பி. ரி. சிறிபால (கந்தற)
★ எச். டபிள்யூ நாமல் நிலந்த (திருகோணமலை)
★ ஏ. அமிந்த சில்வா (வயது18 — கட்டுவப்பிட்டிய)
★ டபிள்யூ. மக்ஸி (வயது 35— நீர்கொழும்பு)
★ டபிள்யூ ரஞ்சித்பெரேரா (வயது 32 — கல்பிட்டி)
★ ஜோஸப் ஈபேன் (வயது 45 — நீர்கொழும்பு)
★ எம். பாக்கீம் (வயது 24 —புத்தளம்)
★ கே. ஜி. கருணரத்தின (வயது 24 — திருகோணமலை)
★ டபிள்யூ ஸ்ரான்லி (வயது 44— திருகோணமலை).

(இ-9)

## தீர்வு குறித்து காமினி

கொழும்பு, ஒக். 19

நட்பு நாடுகளின் உதவியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார். (ஒ-எ-6)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஒக். 19

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் [illegible] துறையினர் அறிவித்துள்ளனர். (இ-4)

# சிறுபடகுகளில் இத்தாலிக்கு செல்ல முயன்ற 140 இலங்கையர் கைது

கொழும்பு, ஒக். 19

இத்தாலி நாட்டுக்குள் சிறு படகுகள் மூலம் பிரவேசிக்க முயன்றதாகக் கூறப்படும் 140 இலங்கையரை அந்த நாட்டுப் பொலீஸார் தடுத்து வைத்துள்ளனர்.

மத்தியதரைக் கடல் மார்க்கமாக இத்தாலிக்குள் பிரவேசிக்க முயன்ற இவர்கள் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தவேளையில் பொலீஸாரால் காப்பாற்றப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த முகவர் ஒருவருக்கு தாங்கள் ஒவ்வொருவரும் இரண்டரை லட்சம் ரூபாவை செலுத்தியதாக இத்தாலிய பொலீஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (இ-4)

# பேச்சு நடந்த மேசையில புலிக்கொடி பறக்கலாமா?
## 'ஐலண்ட்' கிளப்பும் சர்ச்சை

கொழும்பு, ஒக். 19

அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்தவாரம் முதற்கட்டப் பேச்சுகள் நடத்தப்பட்டபோது மாநாட்டு மண்டபத்தில் விடுதலைப் புலிகளின் கொடி பேச்சுவார்த்தை மேசைகளுக்கு நடுவில் வைக்கப்பட்டிருந்ததாக ''சண்டே ஐலண்ட்' படத்துடன் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இதுகுறித்து அப்பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் ஒன்றையும் எழுதியிருக்கிறது.

ஈழம் கொடியை விடுதலைப் புலிகள் பறக்கவிடுகிறார்கள் என்ற தலைப்பிலான அத் தலையங்கத்தில் —

''மாநாட்டு மண்டபத்தில் ஆறுகோண 'ஸ்ராண்ட்' ஒன்றில் இக்கொடி வைக்கப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த முறை தீர்வு காணப்படாவிடில் இனி ஒருபோதுமே தீர்க்க முடியாது

## இதுவே கடைசி பஸ் என்கிறார் லயனல் பெர்னாண்டோ

கொழும்பு, ஒக். 19
பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அதுவும் குறிப்பாக பிரதமர் சந்திரிகாவின் தனிப்பட்ட அக்கறையின் வெளிப்பாடாக தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியே இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம். இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் ஒருபோதுமே இப் பிரச்சினைகு தீர்வு காண முடியாது போகலாம். இதுவே கடைசி "பஸ்". இந்த பஸ்ஸைத் தவற விட்டால் வடக்கும் தெற்கும் நிராதரவாக தனித்தனியே ஸ்தம்பிதமடைந்து நிற்கும் நிலையே தோன்றும்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய அரச தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவரான தகவல், சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ கொழும்பு வார தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி:- புலிகளுடனான முதலாவது சுற்றுப் பேச்சுக்கள் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:- தப்பபிப்பிராயங்கள் எதுவும் இன்றி இப்போது நாம் சமாதானத்தை எய்துவதற்கான சரியான பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளோம் என்று கூற முடியும். நாம் கூறும் கருத்துக்களை மனதில் கொண்டு அவற்றுக்கு இணங்கும் தன்மை புலிகளுக்கு உண்டு. புலிகள் மிகவும் உறுதியாக பேரம் பேசுபவர்கள். எனவே எமது பக்கமும் அவர்களுக்கு சமனாக இருக்க வேண்டி உள்ளது.

கேள்வி:- அரசாங்கத்தின் இதே தூதுக்குழு பேச்சுக்காக மீண்டும் யாழ்ப்பாணம் போகுமா?

பதில்:- அதுபற்றி எனக்குத் தெரியாது. அது பற்றி முடிவெடுப்பது முற்றிலும் அரசாங்கத்தையே சாரும். அடுத்த தடவை நான் போவேனா என்பதைக்கூட முற்று முழுதாகப் பிரதமரிடம் விட்டு விடுகிறேன்.

கேள்வி:- நீங்கள் முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்துக்கும் இன்றைக்கும் இடையில் என்ன வித்தியாசங்களைக் காண்கிறீர்கள்?

பதில்:- 1979 இல் அரசாங்க அதிபராக இருந்த காலத்துக்கும் இன்றைக்கும்



இடையில் பெரிய வித்தியாசத்தைக் காண்கிறேன். யாழ்ப்பாணம் சின்னா பின்னமாகப் போய் விரக்தியுற்ற மக்கள் கொண்ட நகரமாகக் காட்சி அளிக்கிறது. போர் வடுக்கள் நிறைந்த நகரமாக அது காட்சி அளிக்கிறது. மக்கள் போரினால் சலித்துப் போனார்கள். அவர்களது மன உணர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

கேள்வி:- அரச தூதுக்குழுவினர் யாழ்ப்பாணம் சென்ற போது அந்த மக்கள் எவ்வாறு செயற்பட்டனர்?

பதில்:- இது வரலாற்று நிகழ்வொன்று. தூதுக்குழு யாழ். பல்கலைக்கழகத்தில் இறங்கியதும் மக்கள் ஆயிரக்கணக்கில் தூதுக்குழுவினரை சூழ்ந்து கொண்டனர். அவர்கள் எமது கைகளைக் குலுக்கியும் எம்மைத் தொட்டும் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தினர். பல்கலைக்கழகத்தில் இருந்து சுபாஷ் ஹோட்டலுக்கு செல்லும் போது எம்மைக் காணத் திரண்டிருந்த சனத்திரள் காரணமாக வாகன வரிசை மெதுவாகவே செல்ல வேண்டி இருந்தது.

கேள்வி:- இந்த பெரும் திரளான மக்கள் கூட்டம் புலிகளினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் என்று சிலர் சந்தேகிக்கிறார்களே?

பதில்:- இடையவே கிடையாது. யாழ்ப்பாணத்தில் நான் 13 மாதங்கள் அரசாங்க அதிபராகக் கடமையாற்றி உள்ளேன். எனவே நான் யாழ்ப்பாண மக்களின் எண்ணங்களையும் உளப் போக்குகளையும் நன்கு அறிந்தவன். அவர்கள் எம்மை வரவேற்ற முறை எனது மனதை கொள்ளை கொண்டுவிட்டது.

கேள்வி;- யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த சமயம் யாழ். பொது நூல் நிலையம் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:- யாழ். நூல் நிலையம் உலகில் உள்ள தலைசிறந்த நூல் நிலையங்களில் ஒன்று. அந்த நூல் நிலையத்தை நான் கூடுதலாகப் பயன்படுத்தினேன். அக்காலத்தில் ஒரு நாள் அந்த நூல் நிலையத்தில் சந்திரதாஸ் கந்தையா என்ற பிறவியிலேயே ஊமையான சிறுவனைச் சந்தித்தேன். அவன் திறமையாக சித்திரம் வரையும் ஆற்றல் உடையவன். அவனது சித்திரங்களின் கண்காட்சி முதலில் யாழ். நூலக கேட்போர் கூடத்திலும் பின்னர் கொழும்பு கலாபவனத்தில் நடைபெற்றன. அதன் பின்னர் அச் சிறுவன் புதுடில்லி சென்று சித்திரக் கலையைத் தொடருவதற்கு புலமைப் பரிசில் வழங்கினோம். (இ)

### கப்டனுக்கு எதிராக விசாரணை

கொழும்பு, ஒக். 19
கற்பிட்டிக் கடலில் விடுதலைப் புலிகளினால் மூழ்கடிக்கப்பட்ட "சாகரவர்த்தனா' கடற்படைக் கப்பலின் கப்டனுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்துவது என்று பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி கப்பலின் கப்டன் கப்பல் தகர்ப்புச் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டார் என்பது தெரிந்ததே. (உ—எ—6)


**A/L 95 & 96**
அளவையியல்
Mr. R. P. சர்மா
கிறிஸ்தவம்
Mrs. A. மல்லிகா
**SHAMROCK**
யாழ்.
சுண்டுக்குளி.
(33409)



**தவறிவிட்டது**

15-10-1994 [சனி] இரவு கிளாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் அசோக் 6042 இல் இருந்து ஒரு நீலநிற வெள்ளைக் கோட்டு பை தவறிவிட்டது. அதில் ஒரு எவர்சில்வர் குக்கர், மற்றும் சில பொருள்கள் உள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 94/1, புங்கங்குளம் றோட், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[33413]



**G. S. லிங்கநாதன் அன் கோவின்**
**மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை வாரம்**
எமது வாடிக்கையாளர் உட்பட அனைவருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
உங்கள் தெரிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்
மலரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு
அனைத்து ஜவுளிகளும்
மலிவு விலையில்
விற்பனையாகின்றன
**"மாபெரும் மலிவு விற்பனை"**
ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை வீதி, சோதியா தெரு,
(33415) யாழ்ப்பாணம்.


### இன்று

வடமராட்சிக் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களின் மாதாந்த ஒன்றுகூடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

வரணி இடைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பரிசில்நாள் விழா இன்று அதிபர் க. தம்பு தலைமையில் நடைபெறும். (க-117)

★ ★ ★

அபிராமியந்தாதி 50 ஆவது செய்யுள் ஆய்வுரை வெளியீடு வழக்கம்பரை அம்மன் கோயிலில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. (க—28

### ஐ. நாவின் அவதானிகளும் வருவர்?

கொழும்பு, ஒக். 19
ஜனாதிபதி, தேர்தலைக் கண்காணிப்பதற்கு இம்முறை ஐ.நா. மற்றும் சர்வதேச மட்டத்திலான அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

சர்வதேச அவதானிகள் இம்மாதக் கடைசியில் கொழும்பு வந்து சேர்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை: வடக்கு - கிழக்கிலும் அலுவலகங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 19
தேசிய தொழில் பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை வடக்கிலும் கிழக்கிலும் பல புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாக மேற்படி சபையின் வடக்கு — கிழக்கு முகாமையாளர் திரு. ம. சிவயோக சுந்தரம் தெரிவித்தார்.

சபையின் பிராந்திய அலுவலகங்கள் வடக்கிலும் கிழக்கிலும் திறக்கப்பட உள்ளன. இதுவரை காலமும் வடக்கு-கிழக்கு மாகாண அலுவல்கள் சபையின் ராஜகிரிய அலுவலகத்திலேயே நடைபெற்று வந்தன. இதனால் பயிலுனர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், சபை எதிர்வரும் 29 ஆம் திகதி கிழக்கில் 30 கம்பியூட்டர்களைக் கொண்ட பயிற்சி நிலையம் ஒன்றைத் திறக்கவுள்ளது. இப் பயிற்சி நிலையம் திருகோணமலை, கல்முனை, அம்பாறை, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

மேற்படி மாவட்டங்களில் தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து நிலையங்கள், புதிய தையல் பயிற்சி நிலையம் என்பனவும் நிறுவுவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

### ஆலயங்களில்

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 6மணிக்கு சந்திரகும்ப திருவிழா நடைபெறும். (க-17)

### கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 19
நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு தண்ணீருடன் அன்று காலை 7 மணியளவில் யாழ் போதனா வைத்திய சாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார் [க]

## சிறுவர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ். மாவட்ட சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காக்களுக்கு இடையேயான விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஒன்பது சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காக்களிலும் — ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆயிரத்து 200 க்கும் மேற்பட்ட சிறார்கள் உள்ளனர்.

அந்த ஒன்பது சி. போ. ப. பூங்காக்களும் வருமாறு:

யாழ். பொம்மைவெளி, நாவற்குழி லவனிதா குடியிருப்பு, சிறுப்பிட்டி, நாவற்குழி, சுன்னாகம் தெற்கு, நவாலி, இருபாலை, உடுப்பிட்டி, துன்னாலை தெற்கு சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்காக்களாகும்.

தமிழீழத்தின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் இவ் விளையாட்டுவிழா நிகழ்விலே அனைவரும் கலந்து கொண்டு இச் சிறார்களின் ஆர்வத்தை மேலும் மெருகூட்டி அடுத்த தலைமுறையின் தலைவர்களை உருவாக்கும் உன்னத பணியில் பங்கெடுப்போம் என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகம் வெளியிட்டுள்ள குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### புலிகளின் குரல் வானொலியில்

**19 — 10 — 1994**
**புதன் இரவு**

★ 'ஸ்ரீலங்கா அரசப் பிரதிநிதிகளின் யாழ். வருகை நிகழ்வுகளின் தொகுப்பு' — நிகழ்ச்சித் தொகுப்பு சத்தியா
★ 8–20 — ஏர்முனை தென்னை அபிவிருத்தி உரைச்சித்திரம்
★ 8–30 — செய்திகள்
★ 8–40—நாடகம் க. சிவராசா எழுதிய "இது தான் பந்தமா"

**20 — 10 — 1994**
**வியாழன் காலை**

★ 7–02 — மாவீரவணக்கம்
★ 7–15 — விடுதலை கீதங்கள்
★ 7–30 — செய்திகள்
★ 7–35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7–40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்

### றோட்டரக்ட் அதிதி பேச்சுத் தினம்

யாழ். றோட்டரக்ட்கழகம் நடத்தும் அதிதிப் பேச்சுத்தின சொற்பொழிவு இன்று புதன் கிழமை பிற்பகல் 3–30 மணி முதல் யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. குகபாலன் "இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள்" எனும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார். (க)

### நில பயன்பாட்டு ஆய்வு

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ். பிரதேச செயலகம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நிலப்பயன்பாட்டு ஆய்வு ஒன்றை நடத்தி வருகின்றது.

யாழ். செயலக நிலப்பயன்பாட்டு உத்தியோகத்தரின் வழிகாட்டலுடன் யாழ். பிரதேச செயலக திட்டமிடல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்கள் இந்த நிலப்பயன்பாட்டு ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-17)


யாழ். மத்திய கல்லூரியின்
உதைபந்தாட்ட
நூற்றாண்டு விழா
இன்றைய ஆட்டம்: 3 மணிக்கு
**KOKUVIL HINDU**
VS
**J/CENTRAL**
(33412)



தீபாவளித் திருநாளை முன்னிட்டு
★ **யோகாமணி ஆடை அகம்** ★
வழங்கும்
**மாபெரும் மலிவு விற்பனை**
அனைத்துத் தரங்களிலுமான துணிமணிகள் யாவும்
மலிவு விலையில் விற்பனையாகின்றன.
உங்கள் தெரிவுகளுக்கு இன்றே வாருங்கள்
**யோகாமணி ஆடை அகம்**
32, சந்தோஷம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.
கிளை:
**யோகா ஆடை அகம்**
பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி—9517)



**புதுக் கடை திறப்புவிழா**
**மருந்து பால் மா வகைகள்**
(தனியார்) வரைவுள்ளது
மன்னார் மக்களின் சேவை கருதி இன்று 19·10·1994
மருந்து பால் மா வகைகள்
(தனியார்) வரைவுள்ளது
முருங்கன் வீதி, மன்னார்.
என்னும் முகவரியில் தனது சேவையை ஆரம்பிக்கின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.
இந்நிறுவனத்தின் சேவையை வாழ்த்தி நிற்கும் ஏனைய
★ சகோதர நிறுவனங்கள் ★
★ மருந்து பால் மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
484, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்
★ மருந்து பால் மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை:
★ மருந்து பால் மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி, சித்தன்கேணி.
★ மருந்து பால் மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
ஊறணி, வல்வெட்டித்துறை.
★ மருந்து பால் மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
யாழ். வீதி, கிளிநொச்சி.
(சி—9408)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# யாழ். பொது நூல் நிலையத்தை எரித்தவர்களை விரைவில் பகிரங்கப்படுத்துவோம்!

## ஹட்டன் பிரசாரக் கூட்டத்தில் சந்திரிகா

கொழும்பு, ஒக். 19

யாழ். பொது நூல் நிலையத்தை எரித்தது யார் என்பதைக் கண்டு பிடிக்க விசாரணை நடத்தப்படும். தீ வைக்கக் காரணமாக இருந்தவரை பகிரங்கப்படுத்துவோம்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா முன்கண்டவாறு ஹட்டனில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரப்போவதில்லை என்று கூறிய காமினி திஸநாயக்கா இன்று அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிற்கிறார்.

இன்று பின் கதவால் அக்கட்சியின் தலைமைப்பதவிக்கு வந்துள்ளார்.

இன்று இந்த நாட்டில் அச்சுறுத்தல்கள், அநியாயக் கொலைகள், யுத்தம் எல்லாவற்றையும் நிறுத்தி விட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசுக்கு ஆதரவு இருந்தும் அது தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவில்லை.

மாறாக தமிழ் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பறித்தது.

இப்படி அவர் கூறினார். அவர் மேலும் சொன்னதாவது;

யாழ். பொது நூலகத்தைத் திட்டமிட்டு எரித்தவர்கள் யார் என்பதை நாட்டு மக்களுக்கு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா எடுத்துக் கூறினார். தாம் தங்கியிருந்த அசோக் ஹோட்டலில் வாக்குப்பெட்டிகளை அவர்கள் ஒழித்து வைத்திருந்ததும் எங்களுக்குத் தெரியும்.

நூல் நிலையத்தை எரித்ததன் மூலம் அறிவுக்குத் திட்டமிட்ட அநியாயக்காரர்கள் யார் என்பதை மக்கள் முன் நிறுத்துவேன். இது உறுதி.

இவ்வாறு சந்திரிகா கூறினார். (இ-எ)

## நூல்நிலைய எரிப்பு குறித்து விசாரிக்க ஆணைக் குழு

### அரசாங்கம் நியமிக்கும்

கொழும்பு, ஒக். 19

யாழ். பொதுநூல் நிலையம் 1981 இல் எரிக்கப்பட்ட சம்பவம் பற்றி விசாரிக்க விசாரணை ஆணைக் குழு ஒன்றை நியமிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதிகார பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'தஐலண்ட்' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அரச தரப்பினருக்கும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சின் போது, யாழ். பொது நூல்நிலையம் எரிக்கப்பட்டது தொடர்பாக விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கை அரச தரப்பினரிடம் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே. (இ-எ)

## 2ஆம் கட்டப் பேச்சில் ஆயுதப் படையினரும்

### கொழும்புபத்திரிகை தகவல்

கொழும்பு, ஒக். 19

விடுதலைப் புலிகளுடன் இரண்டாம் கட்டப் பேச்சுகள் நடத்தவிருக்கும் அரச குழுவில் ஆயுத படைகளைச் சேர்ந்த சில சிரேஷ்ட பிரதிநிதிகள் இடம்பெறுவர்.

அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி தஐலண்ட் நாளிதழ் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இம்மாதம் 24ஆம் திகதி நடைபெற இருப்பது தெரிந்ததே. (இ-எ)

### பிரேமதாஸா கொலை:

## 4 தமிழ் இளைஞர் மீது விரைவில் வழக்கு

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலை தொடர்பாக நான்கு தமிழ் இளைஞர்கள் மீது அடுத்த மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

இத்தகவலை அரச சட்டத்தரணி அனுரா மெத்தகொட கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் வெளியிட்டார். (இ-எ)

## நந்தா மத்தியூவின் ஆதரவு காமினிக்கு கிடைக்காது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளர் காமினி திஸநாயக்காவை தாம் ஆதரிக்கப் போவதில்லை என்று முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் நந்தா மத்தியு அறிவித்துள்ளார்.

கொலன்னே தொகுதியில் ஐ. தே. க. இளைஞர் பிரிவு அமைப்பாளராக அஜித் ஜெயசூரியாவை ஐ. தே. க. தலைமைப் பீடம் நியமித்திருப்பதால் இவர் அதிருப்தி அடைந்துள்ளார் என்றும்—

அதனை அடுத்தேகாமினிக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று அவர் அறிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

### சந்திரிகாவின் சிங்கப்பூர் விஜயம்:

## பத்திரிகையில் பார்த்தே டி.பி தெரிந்து கொண்டார்

பிரதமர் சந்திரிகா சிங்கப்பூருக்குச் சென்றதை பத்திரிகைகள் மூலம்தான் ஜனாதிபதி விஜேதுங்க தெரிந்து கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே விஜேதாஸ இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரதமர் தனிப்பட்டவிஜயம் ஒன்றை மேற்கொண்டு வெளிநாடு செல்வதாக அவரது செயலாளர்பாலபத்த பெண்டி தம்மிடம்கூறி அவ்விஜயத்தை இரகசியமாக வைத்துக் கொள்ளும்படி தெரிவித்தார் என்றும் திரு. விஜயதாஸா கூறினார். (இ-எ)

## சந்திரிகா மீது நம்பிக்கையில்லா பிரேரணை

கொழும்பு, ஒக். 19

பிரதமர் சந்திரிகா மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதிக்கு அறிவிக்காமல் பதில் அமைச்சர்களை நியமிக்காமல் நாட்டைவிட்டு திடீரென்று பிரதமர் வெளிநாடு சென்றதை கண்டித்து இப்பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை இப்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் —

எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்பு அது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் — ''சண்டே லீடர்'' தகவல் வெளியிட்டுள்ளது. (இ-எ)

## நவம்பர் 23 ஜனாதிபதி பதவியேற்பு

எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து புதிய ஜனாதிபதி எதிர்வரும் நவம்பர் 23 ஆம் திகதி பதவி ஏற்பார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ-4)

## மேலும் சிலதமிழ் இளைஞர் விடுதலை செய்யப்படலாம்

### அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, ஒக். 19

எதுவித குற்றச்சாட்டுக்களும் இன்றி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களைத் துரிதமாக விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறை, பூஸா ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் இருந்து ஏற்கனவே 39 இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மகஸின் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சம்பந்தமாக அரசாங்கம் நியமித்த குழு ஆராய்ந்து வருகிறது. இந்தக் குழு இவ்வாரம் அதன் அறிக்கையை நீதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

இதன் பிரகாரம் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துள்ளது.

கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இது மனித உரிமைகளை அத்துமீறும் செயலாகும் என்று உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

குற்றமற்ற இளைஞர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி இந்த அமைப்புக்கள் முன்னைய அரசாங்கத்துக்கு பல தடவைகள் வேண்டுகோள் விடுத்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை வானொலிச் செய்தியில் இத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஒ)

## தபால் ஊழியரின் சம்பளம்: முரண்பாடுகள் நீக்கப்படும்

கொழும்பு, ஒக். 19

தபால் ஊழியர்களின் சம்பளங்களில் காணப்படும் முரண்பாடுகள் நீக்கப்படும்.

தபால் சேவையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தபால், தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

இலங்கை ரெலிகொம் ஊழியர்கள் அனுபவிக்கும் சலுகைகளை தபால் ஊழியர்களுக்கும் வழங்கத் தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவர் கூறினார். (இ-எ)

## வீடுபார்க்க சென்றவர் திரும்பவில்லை

வடமராட்சி, ஒக்.19

வசாவிளான் குட்டியப்புலம் பகுதியில் உள்ள தனது வீட்டைப்பார்க்கச் சென்ற 80 வயது முதியவர் ஒருவரைக் காணவில்லை.

புத்தூர் நிலாவரை அகதி முகாமில் வசித்து வரும் சின்னப் பொடியன் என்ற முதியவரே இவ்வாறு கடந்த 9 ஆம் திகதி காணாமற் போயுள்ளார். (க-173)

## உபதபால் கந்தோர்கள்

கொழும்பு, ஒக். 19

இந்த ஆண்டின் இறுதிக்குள் நாடு முழுவதிலும் நூறுக்கும் அதிகமான உபதபால் கந்தோர்கள் திறக்கப்பட விருப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இவற்றில் சுமார் 30 தென் மாகாணத்தில் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-எ)

## 50ஆயிரம் பொலீஸார் கடமையில்!

கொழும்பு, ஒக். 19

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின்போது 50 ஆயிரம் பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக சிறீலங்கா பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தேர்தலின்போது பத்தாயிரம் பொலீஸார் தத்தமது பொலீஸ் நிலையங்களிலும் 40 ஆயிரம் பொலீஸார் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (உ-4)

# புலிகள்-அரச தரப்பு பேச்சுக்களை தடுத்து நிறுத்த இந்தியா முயன்றது

## வர்மாவை நரசிம்மராவ் அனுப்பியதன் நோக்கம் இதுதான்

யாழ்ப்பாண தீபகற்பம் பத்து ஆண்டு யுத்தத்தில் துண்டாக, தீவு போல் ஆக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, கிழக்கே மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளும் சேர்ந்து 40 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

பத்து ஆண்டுகளாக நடந்த யுத்தத்தினால் தமிழர் பகுதிகளில் என்ன நிலைமை ஏற்பட்டுள்ளது தெரியுமா?

யாழ். மாவட்ட தமிழர்கள், குறிப்பாக வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய விவசாய பொருள்களை உற்பத்தி செய்து வந்தார்கள். இப்போது எல்லாமே பாதிக்கப்பட்டு முழுமையாக விவசாயம் நிறுத்தப்பட்ட நிலை.

ஜேர்மன், கனடா, ஐரோப்பா, சுவீடன் சென்று வேலை பார்க்கும் நபர்கள் வீட்டுக்கு அனுப்பும் பணத்தை நம்பி மக்கள் வாழ வேண்டி உள்ளது.

ராணுவம் போட்ட தடையால் மின்சாரம் இல்லை, உணவு இல்லை, பெற்றோல் இல்லை, தொலைபேசி இல்லை.

''இல்லை'' என்ற பாடத்தை இருட்டில் படித்து வந்த மக்கள் — வெளிநாட்டுக்கு ஓட முடியாத அப்பாவி ஏழை மக்கள்—அமைதி வேண்டுமென கோருகிறார்கள்.

யாழ். கடலோரம் மீன் பிடிப்போர், சிங்கள கடற்படையால் தாக்குண்டு தொழில் செய்ய முடியவில்லை. வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் இதே நிலை. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சிங்கள மக்களை குடியமர்த்துதல் இன்னும் நின்றபாடில்லை.

ஏற்கனவே 'தமிழீழம் புலிகளின் தாகம்' என முன் வைத்தாலும் புலிகள் திம்பு பேச்சு வார்த்தைக்கு சென்றார்கள். இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை முதல் கட்டமாக ஏற்றார்கள். பிரேமதாசா அரசுடன் பேச மாத்தையா, யோகியை அனுப்பினார் பிரபாகரன்.

அதனால், ஆயுதப் போராட்டமெடுத்த புலிகள், அமைதி வழி பேச்சு வார்த்தையையும் நிராகரிக்கவில்லை.

### பத்தாண்டு தொடர்ந்து யுத்தத்தில் இருக்க முடியாது?

புதிய அரசின் உத்தரவாத சூழல் மீண்டும் பேசத் தூண்டி உள்ளது. ஒரு மக்கள் கூட்டம் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் யுத்தத்திலேயே இருக்க முடியாது. அமைதியும், வாழ்க்கை உத்தரவாதமும், மறுதயாரிப்பும் செய்ய காலம் தேவை. இன்றைய சூழல் அப்படி ஒரு 'இடைவெளி காலத்தை' கோருகிறது.

சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய பிராந்திய கூடுதல் சுயாட்சி வேண்டும் என்பதே இன்று பிரபாகரன் முன் வைத்துள்ள நிலைப்பாடு.

போரை மக்கள் விரும்புவதில்லை, அமைதியையே நாடுகிறார்கள் என்பதை நடந்து முடிந்த தேர்தல் மூலம் சிங்கள மக்களே உணர்த்தியுள்ளார்கள்.

சந்திரிகா சிங்கள மக்களிடம் சிங்கள மொழியிலேயே நம் நாட்டு தமிழர்கள் அல்லல் படலாமா? நமக்கு மனிதாபிமானம் வேண்டாமா? என்றெல்லாம் எடுத்துக் கூறி புலிகளுடன் பேசுவதை நியாயப்படுத்தினார். (ஆதாரம்: சிங்கள பத்திரிகையாளர் சுனந்தா தேசப்பிரியா சென்னையில் நம்மிடம் கூறியது) சந்திரிகா அவரது தொகுதியில் நாலு லட்சத்து எழுபதாயிரம் வாக்குகள் பெற்று வென்றார்.

தொடர்ந்து சிங்கள மக்கள் மத்தியில் ''தமிழர்களுக்கு சுய - நிர்ணய உரிமை கொடுக்க வேண்டும்'' என பிரசாரம் செய்த இடதுசாரித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தனது இரத்தினபுரி மாவட்டத்தில் வெற்றி பெற்றார்.

இது தென்னிலங்கையில் சிங்களவர் மத்தியிலும் கூட, சிங்களஇனவெறி வெற்றிபெறவில்லை என்பதைக் காட்டுகிறது. சிங்கள மக்களும்கூட தமிழர் பிரச்சினை அமைதியாக தீர வேண்டுமென விரும்புகிறார்கள் என்பதையும் உணர்த்துகிறது.

சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி தேர்தலுக்கு முன்பே நக்கீரன் கணக்கிட்டப்படியே வெற்றி பெற்றது.

> தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் ''நக்கீரன்'' வார இதழில், இலங்கைப் பிரச்சினை தொடர்பாக வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

### நிபந்தனை அல்ல எதிர்பார்ப்புகள்

முதல் அறிவிப்பே புலிகளுடன் பேசுவது என்றே அறிவிக்கப்பட்டது. தடைகள் நீக்க வேண்டும். பொருள்கள் சுதந்திரமாக உள்ளே வர வேண்டும். போர் நிறுத்தம் செய்ய வேண்டும் — இவையெல்லாம் நிபந்தனைகளல்ல, எதிர்பார்ப்புகள்.

நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கு புலிகள் தயார் என்றார் பிரபாகரன்.

இப்போது தடை செய்யப்பட்ட பொருள்களுக்கு தடை நீங்கி உள்ளது. பாண் விலை ரூபா 5-50லிருந்து ரூபா 3-50க்கு குறைந்துள்ளது. பருப்பு ரூபா 30 இலிருந்து ரூபா 22க்கு குறைந்துள்ளது.

சமூக நலச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. வறுமையின் எல்லைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களுக்கு ரூபா 1,500 மாதம் வழங்கப்படும். வேலையில்லாத இளைஞர்களுக்கு நிவாரணத் தொகை உண்டு. இப்படியான அறிவிப்புகளை அறிவிப்புகளோடு மட்டும் சந்திரிகா நில்லாமல் செயலிலும் காட்டி வருகிறார்.

### சந்திரகாசன் எதிர்ப்பிரசாரம்

ஆனாலும், மறைந்த தந்தை செல்வாவின் மகனான சந்திரகாசன் போன்றவர்கள் தமிழ்நாட்டிலிருந்து கொண்டு சந்திரிகாவுக்கு எதிராக பிரசாரம் செய்து வருகின்றனர். ஜனவாச கமிஷன் தலைவராக சந்திரிகா இருந்தபோது மலையகத் தமிழர்களை விரட்டியடித்தார் என்பதே இவர்களின் குற்றச்சாட்டு. ஆனால் புலிகளோ, நம்பிக்கையோடு சந்திரிகாவைப் பார்க்கின்றனர்.

இலங்கையில் இப்போது எழுந்துள்ள சிக்கல், சந்திரிகா கட்சி வடக்கு -கிழக்கு இணைப்பையோ அல்லது தமிழர் தாயகம் தனித்து சுயாட்சி பெறுவதையோ ஏற்றுக் கொள்ளவில்லை. அதிகாரம் பரவலாக்கல் (Devolution of Power) என்றே கூறுகின்றார்கள்.

அங்குள்ள அரசு ஒற்றையாட்சி கொண்டது. கூட்டாட்சி அரசு அல்ல; மாவட்டங்களுக்கு அதிகாரம் கொடுத்தாலும், மாவட்டங்களின் சிறுபான்மை தேசிய இன பிரதிநிதித்துவம் மத்திய அரசில் இருக்க வேண்டும். இல்லையேல் முட்டையிடாத பெட்டைக்கோழி நிலைமைதான்.

அதற்கு அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டும். கூட்டாட்சி என புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். அரை கூட்டாட்சியாவது வரவேண்டும்.

அரசியல் சட்டத்தை மாற்ற மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற வாக்குகள் வேண்டும். அது சந்திரிகா கூட்டணியிடம் [illegible] தொண்டமான் காங்கிரஸ் [illegible] யிடம் பேச்சுவார்த்தை நடத்தி ஆதரிப்பதாக செய்தி வந்துள்ளது. அப்படியே நடந்தாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கடினம்தான்'

ஜனாதிபதியே அதிக அதிகாரம் கொண்டவர். ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 9 இல் வருகிறது. சந்திரிகா அதிலும் நிற்கிறார். வெற்றி பெற்று ஜனாதிபதி ஆகிவிடுவார். அதன் பின் ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி, நாடாளுமன்ற ஆட்சி முறையை அவர் கொண்டு வர வேண்டும்.

அதற்கு புதிய அரசியலமைப்பு வேண்டும். இதை ஜனாதிபதியாக இருந்து சந்திரிகா அறிவிக்கும் போது மிச்சம் மீதி இருக்கும் சிங்கள வெறியர்கள் நீதிமன்றம் செல்வார்கள்' யு. எம். பி. தலைவர் காமினி திசநாயகவுடன் பல ராணுவ அதிகாரிகள் அரசியலில் குதித்து பேச்சுவார்த்தையை குழப்ப போகிறார்கள் என்றும் செய்தி வருகிறது.

இவை இரண்டும் தடுக்கப்பட்டால் பேச்சுவார்த்தை வெற்றியில் முடிவதை பிறகு யாராலும் தடுக்க முடியாது.

### இந்தியாவின் பங்கு

இதற்கு இந்தியாவின் பங்கும் மிக முக்கியமானது.

பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என சந்திரிகா புலிகளை அழைத்த நான்காம் நாளே நரசிம்மராவ் தனது தூதர் வர்மாவை இலங்கைக்கு அனுப்பினார். சந்திரிகா வர்மா சந்திப்பு பற்றி அதிகாரப்பூர்வமான செய்திகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

எதிலுமே 'தாமதத்தையே' விரும்பும் பிரதமர் உடனடியாக தனது தூதரை இலங்கைக்கு அனுப்பியது பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது. ராஜீவ் கொலையாளிகளுடன் பேசுவதை நிறுத்துங்கள் என சந்திரிகாவுக்கு ஆலோசனை சொல்லப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

ராஜீவ் கொலை வழக்கில் ராவ் தேவையான அக்கறை காட்டவில்லை. எனவே பேச்சு வார்த்தைக்கும் எக்காரணத்தைக் கொண்டும் முட்டுக் கட்டை போட்டிருக்க மாட்டார் என்று இன்னொரு செய்தி சொல்கிறது.

இதே நேரத்தில் நாம் இன்னொரு சந்திப்பு பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும்.

### கிருஷ்ணய்யர் ராவ்சந்திப்பு

நான்கு மாதங்கள் முன்பு பிரபல மனித உரிமை போராளியும், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியுமான வி. ஆர். கிருஷ்ணய்யர் பிரதமரை சந்தித்து பேசினார்.

பிரபாகரனுடன் இலங்கை அரசு பேசுவதற்குநீங்கள் ஆதரவு தர வேண்டுமென கேட்டார்.

உடனே நரசிம்மராவ், ''என்னை யார் (சோனியா) கவனித்துக் கொண்டிருக்கிறாரென உங்களுக்குத் தெரியுமா? என்றார்.

இதிலிருந்து தெரிய வருவது தூதர் வர்மா, சந்திரிகா புலிகள் பேச்சு வார்த்தையை தடுத்து நிறுத்துவதற்காகத்தான் இலங்கைக்கு அனுப்பப்பட்டார் என்பதே.

26-9-94 அன்று காலை சென்னை பல்கலைக்கழகத்தில் ஒரு கூட்டம் நடந்தது அதில். ''இலங்கையில் அதிகாரப் பகிர்வு'' பற்றிய விவாதம் நடந்தது.

பத்திரிகையாளர் என். ராம் பேசியபோது, ''தார்மீக அளவிலும், அரசியல் ரீதியிலும், இந்தியர் இலங்கையின் புதிய அரசைப் பார்த்து இதைச் செய், இதைச் செய்யக் கூடாது எனக் கூறுவதற்கு உரிமையில்லை'' எனக்கூறினார்.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் நேரம், இந்திய அமைதிப்படை நுழைவின் போது யாழ்ப்பாண பொதுக் கூட்டத்தில் பேசிய பிரபாகரன், ''நான் இந்தியாவை நேசிக்கிறேன்'' என்றார். இப்போதும் அதே குரலில் பேசியிருக்கிறார்.

நல்ல சூழல் கனிந்துள்ளது. இக்கட்டத்தில் இந்திய பிரதமர் உள்நாட்டு அரசியல் காரணங்களுக்காக, 'இலங்கை அரசின முடிவுகளை மாற்றும் நோக்கத்தில் செயல்படுவது இந்தியாவிற்கு அழகல்ல.

இந்த நேரம் தமிழகம் ஒன்று கூடி எழுப்ப வேண்டிய குரல், ''புலிகளுடன் இலங்கை அரசு பேசுவதை டில்லியே தடுக்காதே. ஒத்துழைப்பு கொடு! தமிழனை வாழவிடு!'' என்பதே. (இ)

## அரிசி விலையை குறைக்க அரசு முடிவு

கொழும்பு, ஒக். 19

அடுத்த வாரம்முதல் அரிசியின் விலையையும் கிலோ 12 ரூபாவாகக் குறைக்க ஸ்ரீலங்காவின் புதிய அரசு முடிவு செய்திருக்கின்றது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாண், மா, மண்எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரிசியின் விலையையும் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

அச்சுவேலி, ஒக். 19

இரவு தண்ணீர் அள்ளுவதற்கு கிணற்றடிக்குச் சென்ற சிறுவன் கிணற்றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி மரணமாகிய சம்பவம் ஒன்று கடந்த சனிக்கிழமை நிகழ்ந்தது.

ஆவரங்கால் பிரதான வீதியில் வசிக்கும் முத்துக்குமாரசுவாமி சுப்பிரமணியம் என்ற 10 வயதுச் சிறுவனே இவ்வாறு மரணம் அடைந்தான். (க-11)

## விவசாயிகளுக்கு கடன் வசதி

வலிகாமம் தெற்கு, ஒக். 19

இவ்வருடகால போகத்துக்கான நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு தேவையான கடன்வசதிகளை செய்து கொடுக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இக்கால போக நெற்செய்கையாளர்கள் கடன்பெற விரும்பினால் தத்தம் பகுதிகளில் உள்ள கிராமிய உற்பத்திக்குழுவிடம் தமதுபெயர் விவரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் (?)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறொயிலர் கல்பேட் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிமாட்டி பண்ணை, மயிலங்காடு, சுன்னாகம். (33398)

பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடருக்கு கோழிக்குஞ்சுகள் எடுத்துக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி, (Barக்கு முன் பாக), யாழ்ப்பாணம். (7968)

இனிக் கோழிக்குஞ்சுகள் (கலர்), தாரா, பன்ரம் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். லக்ஷ்மாலா, இல. 48, மூன்றாம் குறுக்குத் தெரு, பாஷையூர். (33405)

### தீபாவளி வாழ்த்து

புதிய டிசைன்களில் அழகிய தீபாவளி வாழ்த்து மடல்கள் [விற்பனையாகின்றது. ''ஆனந்த்ஸ்'' பொத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33364)

### வாழ்த்து மடல்கள்

பிறந்த நாள், திருமண நாள் வாழ்த்துமடல்களையும், தீபாவளி வாழ்த்துக்களையும் விசேட கழிவில் தெரிவு செய்திட இன்றே வாரீர் ''ஆனந்த்ஸ்'' பொத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33387)

### கோழிக்குஞ்சு விற்பனை

18-10-94 செவ்வாயும், புதனும் பிறிமா புறொயிலர் இறைச்சிக் குஞ்சுகள் 42 ரூபா படியும் பிலிமத் கறுப்பு வரிக் குஞ்சுகள் 30 ரூபா. தனிச் சிவப்பு இறைச்சிக் குஞ்சுகள் 35 ரூபா/- வெள்ளை சேவல் குஞ்சுகள் 12 ரூபா படியும் பெற்றுக் கொள்ளலாம். உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக சிங்கம் லேன், உடுவில். (7670)

### மணமக்கள் தேவை

யாழ். இந்து, வயது 39, லக்கினம் இடபம், சித்திரை செவ்வாய் 2 ஆஸ்திரேலியாவில் என்ஜினியராக வேலை பார்க்கும் மகனுக்கும், 29 வயது, லக்கினம் மகரம், சதயம் செவ்வாய் 8, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை மகளுக்கும் தந்தையார் தகுந்த மணமக்களைத் தேடுகிறார். ஜாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 952, மே/பா உதயன். (7967)

### கலைஞர்கள் தேவை

பிரபல இசைக்குழுவுக்கு அனுபவம் பெற்ற பாடகர், தபேலா, லீட் - கிற்றார், பேஸ் - கிற்றார் இசைக்கலைஞர்களும் உதவியாளர்களும் தேவை. விவரங்களுக்கு 20-10-94ற்கு முன்னர் மாலை4-30—6-30க்கு இடையில் தொடர்பு கொள்ளவும்: இல. 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33118)

### தவறிவிட்டது

15-10-94 சனிக்கிழமை கோண்டாவில் - யாழ்ப்பாணம் — பலாலி றோட்டில் கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் விலாசத்தில் ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். சன்மானம் வழங்கப்படும். செல்லச்சாமி மே/பா T. குமாரசாமி, இல. 7, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (33392)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி உடன் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஆஷா கோழிப் பண்ணை, 1ஆம் கட்டை, பருத்தித்துறை. (33363)

### இலவச சிகிச்சை

இலவச அக்குபஞ்சர் சிகிச்சை வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தால் தினமும் காலை 8-30—12-30 வரை சகல நோய்களுக்கும், இல. 35, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். (33332)

### மணமகள் தேவை

27 வயது, உத்திரட்டாதி நட்சத்திரம் உடைய ஜேர்மன் வீசாவுள்ள இங்குள்ள மணமகனுக்கு மணப்பெண் தேவை. முழுவிவரங்களுடனும் விண்ணப்பிக்கவும். இல. 37, மே/பா உதயன், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (7672)

---

உ
சிவமயம்

## ஆர்வலர்களுக்கு...

சிவஞானபோதம் அருளிய மெய்கண்ட தேவ நாயனார் திருநாள் 03 — 11 — 94 வியாழக்கிழமை கொண்டாடுக.

இவ்வண்ணம்;

**மெய்கண்ட தேவர் ஆதீனம்**
5, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.
(33400)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08 — 06 — 1922

மறைவு: 18 — 09 — 1993

அமரர்
**கணபதிப்பிள்ளை பரராஜசேகரன்**
(வவுனியா)
(ஓய்வு பெற்ற O. A., வனபரிபாலன திணைக்களம்)

ஓராண்டு மறைந்தாலும், உங்கள் நினைவு நெஞ்சை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்,

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை,
(33353)

---

80 ஆவது
## பிறந்த தின நினைவு
(19 — 10 — 1994)



அமரர் பல்கலைப் புலவர்
**க. சி. குலரத்தினம்**
அவர்கள்

''உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.''

இனிக்க இனிக்கப் பேசிப்பிரியும் போது
''இனி இவரை
எப்போது காண்போம்''— எனும் ஏக்கத்தை
நெஞ்சில்
நிரப்புவது அறிவிற் சிறந்த புலவர் செயலாகும்
— கல்வியின்
இயல்பு கற்றோரைப் பிரிய இடம் தராது.

பிரிவினால் ஏங்கும்:

அபிமானிகளும்
மிக்கலைக் குடும்பமும்

[illegible]

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி இரண்டாம் அரையாண்டு பரீட்சை-1993

மேற்குறிப்பிட்ட பரீட்சை நவம்பர் மாதம் 18ஆம், 19ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் தினமும் பி.ப. 1-00 மணிக்கு நடைபெறும்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 31-10-1994க்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் தங்களது பரீட்சை விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

— பதிவாளர்.

[சி-9405]

---

புலோலி பொதுசன நூலகர்
## பாராட்டுப் பெறுகின்றார்



### திரு. ஏ. என் எஸ். திருச்செல்வம்

புலோலி பொதுசன நூலகரும், எமது பாடசாலை அபிவிருத்திச்சபையின் நீண்ட கால உறுப்பினருமான திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ''சிறந்த பொதுசன நூலகர்'' தேர்வில் பாராட்டுப் பெறும் சிறந்த நூலகராகத் தெரிவாகி தமிழின்ப கண்காட்சி பரிசளிப்பு விழாவிலே பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார். தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் இவருக்கான பாராட்டுச் சான்றிதழை வழங்கிக் கௌரவித்துள்ளார். இவரது சேவைகள் தொடர்ந்தும் சிறப்புற மனமார வாழ்த்துகிறோம்.

**— பாடசாலை அபிவிருத்தி சபை.**

பருத்தித்துறை மெதடிஸ்த —
பெண்கள் உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை.
[33402]

---

## வீடு தேவை

இருவரும் அரசாங்க சேவையிலுள்ள மொத்தம் நால்வர் கொண்ட குடும்பத்திற்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் வாடகைக்கு வீடு தேவை.

அரசாங்க அதிகாரி,
430, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/ 9337)

---

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி கந்தையா மங்கையர்க்கரசி

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி நாவலர் ஒழுங்கையைச் சேர்ந்த

**செல்வி கந்தையா மங்கையர்க்கரசி**

**14 — 10 — 1994**இல் ஜேர்மனியில் காலமாகி விட்டார் என்ற செய்தி கேட்டு மிக்கவேதனை அடைகிறோம்,

● அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள் ●

**— அயலவர்கள்.**

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
[33408]

---

## பதவி வெற்றிடம்

**புங்குடுதீவு - நயினாதீவு**
**ப. நோ. கூ. சங்கம் (வ. து)**

**பொதுமுகாமையாளர் தரம் III**

1. **கல்வித் தகைமைகள்:**

(அ) கூட்டுறவு வேலையாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமைத்துவ / மேற்பார்வையாளர் பதவியில் 3 வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் 9ஆவது சம்பளத் திட்டப் பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது சமமதிப்புள்ள தராதரமும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவ மட்ட பதவியில் 2 (இரண்டு) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறி (உயர் தரம்) தராதரப் பத்திரம் க. பொ. த. (உயர் தரம்) தராதரப் பத்திரத்தில் 3 பாடங்களில் சித்தியும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. **சம்பளத் திட்டம்:** $\frac{1105 - 2170}{60X4 - 75X11}$ இதரபடிகளும்
3. **வயதெல்லை:** 23 — 50
4. **பிணை ரொக்கம்:** 3000/-
   **உறுதிப்பிணை:** 5000/-
5. **விண்ணப்ப முடிவு திகதி: 03—11—1994**

★ விண்ணப்பங்கள்

தலைவர்,
புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்,
இல. 201/1, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்
[illegible]
(சி-9406)

---

# தரவுகள் சேகரித்தல் பற்றிய கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 19

பிரதேசப் பிரிவு மட்டத்தில் அபிவிருத்தித்திட்டங்களை முறையாக தயாரிக்கத் தேவையான தரவுகளைச் சேகரிக்கும் முறைபற்றி விளக்கும் கலந்துரையாடல் ஒன்று நாளை 20 ஆம் திகதி காலை 8. 30 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மத்திய அரசு திட்டமிடல் அமைச்சும், வட-கிழக்கு மாகாணசபை திட்டமிடல் செயலகமும் இணைந்து நடத்தும் இக் கலந்துரையாடலில் மாகாண திட்டமிடல் அமைச்சு பிரதிச் செயலாளர் திரு. எஸ். ரங்கராஜன் பங்குபற்றுகிறார்.

பிரதேசபிரிவு மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை முறையாகத் தயாரிப்பதற்கு போதிய தரவுகள் இல்லாத நிலையில், அவற்றை திரட்டும் நோக்குடன் இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் பிரதேசசெயலர்கள், பிரதேச உதவிசெயலர்கள், பிரதேச திட்டமிடல் பணிப்பாளர்கள், புள்ளிவிவர அலுவலர் திட்ட அமுல் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றுவர். (க-3)

## ஸ்தாபகர் தின விழா

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய ஸ்தாபகர் தின விழா கடந்த 12 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. அ. பொ. செல்லையா தலைமையில் இடம் பெற்றது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் ஸ்தாபகர் உரையை நிகழ்த்தினார். (ஒ-117)

## ஐ. நா. தின போட்டிகள்

தென்மராட்சி, ஒக். 19

ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான பொது அறிவுப் போட்டி, பேச்சுப்போட்டிகளை எதிர்வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் நடத்தவுள்ளனர். (ஒ-117)

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஒக். 19

சங்கானைப் பிரதேச செயலகம் பொம்மைவெளி வாழ்க்கைத்திறன் கல்வி நிலையத்தில் தும்புத்தொழில் பயிற்சி நெறி ஒன்றை நேற்று முன்தினம்ஆரம்பித்துள்ளது.

இப்பயிற்சி நெறியில் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். சங்கானை பிரதேசச் செயலக தும்புத் தொழில் போதனா ஆசிரியர் செல்வி கு. சூரியா தலைமையில் பயிற்சி நடைபெற்று வருகின்றது. (க-17)

## சந்திரிகா வென்றால் பிரதமர் யார்?

கொழும்பு, ஒக். 19

புதிய ஜனாதிபதியாக சந்திரிகா தெரிவு செய்யப்படும் பட்சத்தில் நவம்பர் 9 ஆம் திகதிக்குப் பின்னர் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூடி புதிய பிரதமரை தெரிவு செய்யும்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரே புதிய பிரதமராக தெரிவு செய்யப்படுவார் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## யாருடைய சங்கிலி?

யாழ்ப்பாணம், ஒக். 19

வலிகாமம் தெற்குப் பகுதியில் தாம் கண்டெடுத்த தங்கச் சங்கிலி ஒன்றை அன்பர் ஒருவர் உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

அதனைத் தவறவிட்டவர்கள் உரிய அத்தாட்சிகளைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ)

## லயன்ஸ் கழக கண் சிகிச்சை முகாம்

தென்மராட்சி, ஒக். 19

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் ஆறாம் கட்ட கண் சிகிச்சை முகாம் கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்தப்பட்டது.

இச் சிகிச்சை முகாமில் 252 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு கண்ணில் பூப்படலம் பாதிக்கப்பட்ட பலர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கண் சத்திர சிகிச்சை அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. (ஒ- 117)

## இலவச சேவை

வட்டுக்கோட்டை, ஒக். 19

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் சித்தன்கேணியில் உள்ள வட்டு. தொண்டேயம் நிறுவனத்தின் கட்டடத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 2 முதல் 3 மணிவரை நோயாளருக்கு இலவசமாகச் சிகிச்சை அளித்து வருகிறார்கள். (க-161)

## வீதி விளக்கு சேதம்

வட்டுக்கோட்டை, ஒக். 19

வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியில் பொது ஸ்தாபனங்கள் அமைத்த வீதி விளக்குகளை விஷமிகள் சிலர் சேதப்படுத்தியுள்ளதாக அறிய வருகின்றது. (க-161)

---

## வாழ்த்துகின்றோம்

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்
**செல்வன் குணராஜா நக்கீரன்**
அவர்களின்

### கர்நாடக இசை அரங்கேற்றம்

இசை மேதை
**திரு. எல். திலகநாயகம்போல்**
அவர்களின் மாணவன்

நேரம்: பி.ப.4·00மணி
காலம்: புதன்கிழமை (19 - 10 - 94)
இடம்: நல்லை திருஞானசம்பந்த ஆதீன கலா மண்டபம்.

பழையமாணவர், பெற்றோர், நலன்விரும்பிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.**
கொக்குவில் இந்துக்கல்லூரி.
(சி/9407)

---

## கிடைத்தது

**15 — 10— 94** உதயனில் (விளம்பரம் 33355) தவறிவிட்டது என்ற தலையங்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விவரப்படி உரிய பொருள்களைக் கண்டெடுத்த- நாவலர் வீதியைச் சேர்ந்த திரு. சி. சிவயோகராஜன் என்பவர் எம்மிடம் ஒப்படைத்துள்ளார் என்பதை, மேற்படி விளம்பரதாரருக்கு மிக்க நன்றியுடன் தெரிவிக்கிறோம். விவரம் எமது தேவஸ்தானத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

பொறுப்புரிமை - பரிபாலன சபை,
**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்,**
நாகேஸ்வரம் - அளவெட்டி.
(33407)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சந்திரிகாவின் நிலைப்பாடுகள்

பிரதமர் சந்திரிகா குமாரதுங்க கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளருக்கான செவ்வி நிகழ்ச்சியில், பல முக்கிய விடயங்களை வெளியிட்டிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டு நாட்டில் சமாதானத்தை உருவாக்குவது என்ற தமது நோக்கத்தை அடைய வேண்டும் என்பதில் சந்திரிகா இலக்காக உள்ளார் என்பது மிகத் தெளிவாகிறது. அந்த நோக்கத்தை அடைவதற்குத் தடையாக அல்லது தடங்கலாக வரக்கூடியவற்றை எதிர்கொண்டு, தாண்டிச் செல்லக் கூடிய துணிச்சல் உண்டு என்பதையும் அவர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

பூநகரிப் பாதையைத் திறந்து, வடபகுதிமக்கள் மீது முந்திய அரசு விதித்த போக்குவரத்துத் தடையை நீக்குவதிலும், வடக்கு-கிழக்கில் போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதிலும் சாதகமான —முடிவை எடுக்கவுள்ளார் என்பதனை அவர் கோடி காட்டியுள்ளார்.

இதனைத் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் மட்டுமன்றி, சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களும் வரவேற்பார்கள். போர் நிறுத்தம், போக்குவரத்துத் தடை நீக்கம் ஆகியன இராணுவத்தோடு சம்பந்தப்பட்டதால், இவ்விடயங்களில் முடிவு எடுப்பதில் சந்திரிகா தாமதம் செய்வார் அல்லது பின்னடிப்பார் என்றே பரவலாகக் கருதப்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருப்பதால் இராணுவத்துடன் முரண்பட விரும்பமாட்டார் எனவும் பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆட்சியில் இருப்பது அரசாங்கம்; இராணுவம் அல்ல. சமாதானப் பேச்சு அதன் இலக்கு, வேகம் ஆகியவற்றை நிர்ணயிப்பது அரசாங்கமே; படைகள் அல்ல. முன்னைய அரசினால் இராணுவத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. முன்னர் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வி அடைந்ததற்கு இராணுவமே காரணம். இராணுவம் தனக்குச் சரி எனப்பட்டதைச் செய்வதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை — என்ற அவரது பதில், இது விடயத்தில் அவர் ஆழமான உண்மையைக் கண்டறிந்துள்ளார் என்பதற்குச் சான்று.

அவரின் இந்த நிலைப்பாடு கடந்த பதினொரு வருட கால இலங்கை அரசியலில் முற்றிலும் திருப்புமுனையானதாகும். ஒரு திறமையான அரசாங்கத் தலைவராக இருப்பதற்கான தகுதியை சந்திரிகாவிடம் இங்கே காணமுடிகிறது.

சமாதானப் பேச்சிலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதிலும் சந்திரிகா நேர்மையாக, உண்மையாக உள்ளார் என்பதனையும் அவரது செவ்வி மூலம் தெரியப்படுத்தி உள்ளார்.

அமைதி சமாதானம் ஏற்படவேண்டும் என்றால், பெரும்பான்மை இனச் சிங்களச் சமுதாயம் பெருமளவு விட்டுக்கொடுக்க வேண்டி வரும்— என்ற சந்திரிகாவின் பதில், தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்கவேண்டும் என்ற நிதானப் போக்கை உணர்த்துகிறது.

மொத்தத்தில் திறமையும், துணிச்சலும், சாணக்கியமும், சமயோசிதமும் சாதுரியமும் மிக்க நிதானமான, நியாய சிந்தையுடைய அரசியல் தலைவராகத் திகழவே சந்திரிகா விரும்புகிறார் என்பதனை அவர் வெளிப்படுத்தி உள்ளார்.

எனவே அவரது காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு, தமிழர்கள் இயன்றளவு ஒத்துழைப்பு நல்குவது, 'சந்தர்ப்பம் அளிப்பது மிகவும் விரும்பத்தக்கதாகும்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஸ்திரமான அரசாங்கம் ஒன்று அவசியம்

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முக்கியமானது
## புரொன்ட்லைனுக்கு அன்ரன் பாலசிங்கம் பேட்டி

'புரொன்ட் லைன்' ஆங்கில வார இதழுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அளித்த பேட்டி இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

பேட்டி கண்டவர்:
வி. ஐயந்த்.

கேள்வி: இப்போதுள்ள இராணுவ நிலைவரம் பற்றி என்ன கருதுகிறீர்கள். இலங்கைப்படையினரின் இராணுவ நிலைப்பாடு பற்றி என்ன தெரிந்து கொண்டீர்கள்.

பதில்: அமைதி, இயல்பு நிலைக்குத் தேவையான உகந்த சூழ்நிலையை கட்டி எழுப்புவது பிரச்சினையாக இருக்கப் போகிறது. யுத்த நிறுத்தம் ஒன்று இல்லாமல் சமாதான முயற்சிகள் சீர்குலையும். யுத்த நிறுத்தம் இல்லாவிடில் மோதல்கள் இடம்பெறும் சாத்தியம் உண்டு. முன்னரும் இப்படி நடந்தது.

1985 திம்புப் பேச்சுகளின் போது படையினர் யுத்த நிறுத்தத்தை மீறினர். வவுனியாவில் 200 பேர் கொல்லப்பட்டனர். திம்புப் பேச்சுகளை நாம் பகிஷ்கரித்தோம். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுடனான பேச்சுகளும் யுத்த நிறுத்த மீறல்களால் தான் தோல்வி அடைந்தன. இதற்கு நாங்கள் தான் காரணம் என்று அரசு குற்றம் சாட்டியது. நாம் அவர்கள் மீது குற்றஞ்சாட்டினோம். காரணம் எதுவாக இருந்தாலும் யுத்த நிறுத்த மீறல் தான் பேச்சு முறிவுக்குக் காரணம்.

## ஆயுதப் படையினரின் ஒத்துழைப்பு இன்றி தீர்வு காண்பது கடினம்

இப்போதும் இருதரப்பினரும் பரஸ்பர நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இம்முக்கிய கட்டத்தில் ஆயுத மோதல் நிறுத்தம் தேவை. யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்பதற்கு ஆயுதபடையினர் ஏன் தயக்கம் காட்டுகின்றனர் என்பது தெரியவில்லை.

கேள்வி: யுத்த நிறுத்தம் பற்றி இலங்கைப் படையினர் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் அவர்கள் தங்களின் தற்போதைய நிலைகளில் இருந்து வாபஸ் வாங்குவதை விரும்பவில்லை. சமாதானத்தில் நாட்டம் இருப்பதை நீங்கள் தீவிரமாகக் காட்டுவது மூலம் இராணுவத்தினரிடையே நம்பகத்தன்மையை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

பதில்: யுத்த நிறுத்தமும் படை விலக்கலும் இரண்டு

## ஜனநாயக முறைக்கு தமிழ்க் குழுக்கள் திரும்ப வேண்டும்

வெவ்வேறு பிரச்சினைகள். இருதரப்பினரும் பேச்சுகள் நடத்த யுத்த நிறுத்தம் அத்தியாவசியமானது. முந்திய பேச்சுகளும் யுத்த நிறுத்தத்துடன் தான் நடத்தப்பட்டன. படையினரை அவர்களின் நிலைகளில் இருந்து வாபஸ் வாங்கும்படி நாம் கோரவில்லை.

யுத்த நிறுத்தத்தினால் இராணுவத்துக்கு பாதகமான நிலை இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆயுதபடையினரின் ஒத்துழைப்பு இன்றி சமாதான முயற்சிகளை மேற்கொள்வது மிக, மிகக் கடினமான காரியமாகும்.

உதாரணமாக நாம் கொழும்பு போவது என்றால் வவுனியா அல்லது பலாலி வழியாகத் தான் செல்ல வேண்டும். இராணுவ நிலைவரம் மாறவில்லை என்றால் எம்மால் போவது கஷ்டமானதாகும். எந்த சிறுமோதலும் பாரிய மோதலாக மாற முடியும். அது அமைதிப்பேச்சுகளைச் சீர்குலைக்கும்.

### கொழும்பில் ஏற்பட்ட மாற்றம்

கேள்வி: கொழும்பில் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றம் தான் புதிய சமாதான முயற்சி மேற்கொள்ளப்படுவதற்கு காரணம் என எண்ணுகிறீர்களா?

பதில்: ஆம் நிச்சயமாக 1990 ஆம் ஆண்டில் ஈழம்—2 யுத்தம் ஆரம்பமான பின்னர் சமாதான பேச்சுகளுக்கு தயாராகவிருப்பதாக விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னரும் அப்போதைய அரசு சமாதானமுயற்சிகளை மேற்கொள்ளாது இருந்து வந்தது. ஆனால் தற்போது ஆட்சி மாற்றம் நிலைவரத்தையும் மாற்றியது. இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணவும் சமாதானம் கொண்டு வரவும் சந்திரிகா மக்களின் ஆணையைப் பெற்றுள்ளார். மற்றும் அவர் சில நல்லெண்ண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். புதிய அரசாங்கம் ஏற்பட்டுள்ளதும் பிரதமரிடம் இருந்து வெளிப்பட்டுள்ள சாதகமான நடவடிக்கைகளும் சமாதான பாதையில் செல்ல விடுதலைப்புலிகளுக்கு ஊக்கமளிக்கிறது.

### சந்திரிகா முற்போக்கு தலைவர்

கேள்வி; அரசின் எண்ணம் இதயசுத்தியானதா என்று நீங்கள் நிச்சயப் படுத்துவீர்களா?

பதில்; ஆம். சந்திரிகா ஒரு முற்போக்குத் தலைவர். அவர் ஒரு பேரினவாதி அல்லர். கடந்த காலத் தலைவர்கள் போன்றுபேரினவாத கோஷங்களை எழுப்பி அதிகாரத்துக்கும் அவர் வரவில்லை. பேச்சுகள் மூலம் பிரச்சினையை தீர்க்க அவர் விரும்புகின்றார். நாம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மிகவும் அக்கறையாக இருந்து வருகின்றோம்.

கேள்வி: சமாதானம்பேசும் கட்டத்தைத் தாண்டி நீங்கள் அதிகதூரம் சென்று விடவில்லையா?

பதில்; நான்கு தசாப்தங்களாக போராட்டம் நடந்து வருகிறது. எமது முந்திய தலைவர்களால் இரண்டரை தசாப்தங்களாக அஹிம்சைப் போராட்டம், நடத்தப்பட்டு வந்தது. ஆயுதப் போராட்டத்தில்நாம் கடந்த 15ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றோம். தற்போது பெரிய அளவில் ஆயுதப் போராட்டம் விரிந்துள்ளது. வடக்கில் பெருமளவு பிரதேசங்களும் கிழக்கில் சில பிரிவுகளும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இப்பிரதேசங்களை நிர்வகிக்கக் கூடியதாக எமது சொந்த நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை நாம் உருவாக்கி வருகின்றோம். அரசு நிர்வாக இயந்திரம் செயலிழந்து விட்டதே இதற்குக் காரணம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஸ்ரீலங்காவின் சட்டம்—ஒழுங்கு இப்பகுதிகளில் இல்லை. ஆகவே நாங்கள் இந்த நிர்வாகக் கட்டமைப்புகளை ஏற்படுத்தியுள்ளோம். அரசியல் தீர்வு ஒன்றுக்கு செல்வதற்கு நாம் தயக்கம் காட்டுவது இதன் அர்த்தம் அல்ல.

எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை உத்தரவாதம் செய்யக் கூடிய இறுக்கமான யோசனைகளையே விடுதலைப்புலிகள் இயக்கம் கோருகிறது.

அப்போது எம்மால் ஆரம்பிக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பை, இலங்கை அரசுடன் செய்துகொள்ளும் புதிய உடன்பாட்டின் கீழ் விரிவுபடுத்த முடியும்.

உதாரணமாக பொலிஸ் சேவையை எடுத்துக் கொள்ளுங்கள். எம்மிடம் உள்ள காவல்துறை ஒரு புறத்தோற்ற (Skeletal Structure) அமைப்புத்தான். அரசின் ஆசியுடன் அதனை மேலும் விரிவுபடுத்த முடியும்.

கேள்வி: இரு தரப்பினருக்கும் இடையே பாலம் கட்ட என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: நாமும் அரசியல் தீர்வு ஒன்றைக் காண உறுதி பூண்டுள்ளோம். அரசுடன் மிகுந்த கரிசனையான பேச்சுகளை நடத்த நாம் விரும்புகின்றோம்.

உறுதியான கட்டமைப்



புடன் (Framework) கூடிய யோசனை ஒன்றை அரசாங்கம் முன்வைக்குமா என்பதை அறிந்து கொள்ளத்தான் நாம் முயற்சித்து வருகின்றோம். நாம் திறந்த மனதுடன் இருக்கின்றோம். நாம் நிபந்தனைகள் எவற்றையும் விதிக்கவில்லை. சமாதான முயற்சிக்கும்ஊறுவிளைவிக்கும்எதனையும் நாம் மேற்கொள்ளவில்லை. அரசு யோசனைகளை சமர்ப்பித்தால் அவற்றைப் பரிசீலனை செய்து கலந்துரையாடத் தயாராக இருக்கின்றோம். யுத்த நிறுத்தம் தொடர்பாக இராணுவத்தின் அணுகுமுறை சமாதான முயற்சி வெற்றியீட்டுவதற்கு பிரச்சினையாக இருக்கக் கூடும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

### பிரேமதாஸாவை ஏமாற்றவில்லை

கேள்வி: கடந்த கால அனுபவங்களை காரணம் காட்டி விடுதலைப் புலிகளுடனான பேச்சுகள் குறித்து தென் பகுதியில் அவநம்பிக்கை நிலவுகிறது. அதனை எப்படி நீக்கப் போகிறீர்கள்?

பதில்; விடுதலைப் புலிகளுக்கு எதிராக நீண்ட காலமாகக் கூறிவரும் குற்றச்சாட்டுக்கள் இவை. முதல் தடவையாக திம்புப் பேச்சுக்களின் போது தான் அரசுடன் விடுதலைப் புலிகள் நேரடியாகப் பேசினார்கள். அன்று தொடக்கம் அரசு பேச்சுக்களில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை.

உருப்படியான யோசனைகளையும் சமர்ப்பிக்கவில்லை. இதன் காரணமாக அப்பேச்சுகள் வெற்றியளிக்கவில்லை. விடுதலைப் புலிகளை நம்ப முடியாது என்பது அதன் கருத்தல்ல. இறுக்கமான, உருப்படியான யோசனைகளை அரசு முன் வைத்து, அவற்றை நாம் நிராகரித்திருப்பின் நம்பிக்கைத் துரோகிகள் என்று விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டலாம்.

இரண்டு வருடங்களாக பிரேமதாஸா அரசுடன் பேசினோம். எவ்வித தீர்வு யோசனைகளும் அதில் வெளிவரவில்லை. அப்பேச்சுக்கள் மூலம் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை. நாம் பிரேமதாஸாவை ஏமாற்றவும் இல்லை; பேச்சுவார்த்தையை முறிக்கவும் இல்லை.

### மாகாண எல்லைகள்

கேள்வி: பிரதமர் சந்திரிகா மாகாண எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வது பற்றிப் பேசுகின்றார். அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்; அது பற்றிய விவரங்கள் எம்மிடம் இல்லை. விவரங்களை அறியாமல் நேரடியாக என்னால் கருத்து வெளியிட முடியாது. மீள் நிர்ணயம் செய்வதில் பல விஷயங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. [illegible] கப்படும் எந்த யோசனை [illegible] தயாராகவிருக்கின்றோம்.

கேள்வி: உங்களின் ஈழம் கோரிக்கை குறித்து தென் பகுதியில் மக்கள் பிரிவினை என்று உணர்ச்சிவசப்படுகின்றார்கள், உங்கள் நிலைப்பாட்டில் ஏதும் மாற்றம் உண்டா?

பதில்; ஈழம் அரசியலில் ஈழம் கோரிக்கையை மிதவாதிகள் என்றழைக்கப்படும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தான் கொண்டு வந்தார்கள். சுயநிர்ணய உரிமையையும் தனி நாட்டையும் அவர்கள் வலியுறுத்தினார்கள். பின்னர்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் வந்தது. நாங்களும் அதனை எடுத்துக் கொண்டோம்.

பேச்சுகளுக்கு நாம் தயார் என்று கூறும் போது, அதன் அர்த்தம் தனிநாட்டுக் கோரிக்கையைத் தவிர்ந்த மாற்றுத் திட்டங்களுக்கு நாம் தயார் என்பதேயாகும். இது தெளிவானது.

ஈழம் குறித்து அரசு பேச்சுக்கள் நடத்தாது. ஈழத்துக்கு உருப்படியான மாற்றீட்டுக்கு நாம் தயார். இதன் அர்த்தம் நாம் எமது சுயநிர்ணயக் கோரிக்கையை கைவிடுகின்றோம் என்பதல்ல.

கேள்வி: இராணுவ நிலைவரம் பற்றிய உங்களின் மதிப்பீடு என்ன?

பதில்: வடபகுதியில் பரந்தளவு பிரதேசங்கள் எமது கட்டுப்பாட்டில் உள்ளன. இராணுவத்திடம் சில பகுதிகள் உள்ளன. கிழக்கில் கரையோரப் பட்டினங்களை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரமுடிந்தது. கிழக்கு மாகாணத்தில் காட்டுப்பகுதிகளில் நாம் இருக்கின்றோம். கைப்பற்றப்பட்ட பகுதிகளில் நாம் எமது நிலைகளை இராணுவ ரீதியில் மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் கட்டியெழுப்பக்கூடியதாக உள்ளது. எமது நீதி மற்றும் காவல்துறை கட்டமைப்புக்களை நாம் அமைத்து வருகிறோம்.

சுயசார்பு பொருளாதாரக் கட்டமைப்பு ஒன்றையும் நாம் கட்டியெழுப்பிவருகின்றோம். யாழ். குடாநாட்டை கைப்பற்ற அல்லது விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை உடைக்க இராணுவம் பாரிய முயற்சிகளை எடுத்தது; ஆனால் அவை தோல்வி கண்டன.

இப்போது இராணுவம் ஸ்தம்பித நிலைக்கு ஆளாகியுள்ளது. ஆனால் விடுதலைப் புலிகளோ எதிரிகளின்பலாலி, காங்கேசன்துறைதுறைமுகம், பூநகரி ஆகிய தளங்களுக்குள் ஆழமாக ஊடுருவித் தாக்குதல் நடத்தும் வல்லமை பெற்றுள்ளார்கள். அத்தளங்களுக்கு நாம் பல சேதங்களை விளைவித்துள்ளோம்,

நாம் தொடர்ந்து போராளிகளைத் திரட்டி பயிற்றுவித்து வருகின்றோம். இராணுவ மயப்படுத்தல் தொடர்கிறது. பாரிய தாக்குதல் ஒன்றை இராணுவம் குடாநாட்டில் மேற்கொள்வது இலகுவானதாக இருக்காது. ஆட்லறி ஆயுதங்கள் பாவிக்கப்படுவது மக்களுக்கு அதிக இழப்பை ஏற்படுத்தும். சில பகுதிகளை அவர்கள் கைப்பற்றினாலும் அவற்றை தக்க வைத்துக் கொள்வது அவர்களுக்கு கஷ்டமான காரியமாக இருக்கும். ஏற்கனவே இராணுவம் பூரணமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது

இராணுவத்தை விஸ்தரித்துக் கொண்டே செல்வது பொருளாதார ரீதியில் இலங்கையினால் தாங்கமுடியாது. அவர்களுக்கும் பிரச்சினை உண்டு. இரு தரப்பினரும் அமர்ந்து இருந்து பேச்சுக்களை நடத்துவதற்குரிய நேரம் வந்து விட்டது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது என்பதை புதிய அரசாங்கம் இப்போது உணர்ந்துள்ளது. பெறுமதியான உயிர்களை இழப்பதிலும் பார்க்க அரசியல் தீர்வு ஒன்றை காண நாம் உழைக்க வேண்டும்.

கேள்வி: பேச்சுவார்த்தை முடிவில், நீங்கள் ஏற்கனவே அனுபவிப்பதிலும் பார்க்க கணிசமான அளவு குறைந்தது தான் உங்களுக்கு கிடைக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

15 ஆண்டு கால போராட்டத்தின் பின்னரும், உயிரிழப்புகளின் பின்னரும், குறைந்த அளவிலான தீர்வு ஒன்றை ஏற்றுக் கொள்வது பெறுமதியானதாக இருக்குமா?

### இந்திய - இலங்கை ஒப்பந்தம்

பதில்; நான் அப்படி எண்ணவில்லை. நாம் வைத்திருக்கும் அதிகாரங்களிலும் பார்க்க கணிசமான அளவு கூடுதலாகவே நாம் பெற வேண்டும். சமாதானம் மற்றும் கௌரவத்துடன் வாழக் கூடிய அரசியல் உரிமைகளை எமது தாயகத்துக்கு வழங்கும் சுயாட்சியையே நாம் எதிர்பார்க்கின்றோம். கூடுதலான கணிசமான சுயாட்சி உடைய அரசாங்கம் ஒன்றையே நாம் நம்புகின்றோம்.

இந்திய — இலங்கை ஒப்பந்தம் போதுமானதாக இல்லாததினால்தான் அதனை விடுதலைப் புலிகள் எதிர்த்தனர். இருந்தும் அந்த உடன்பாட்டில் தமிழ் பேசும் மக்களின் சரித்திர ரீதியான தாயகம் என்பது பூரணமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதில் நிரந்தர இணைப்பு கூறப்பட்டிருக்கவில்லை. கிழக்கில் நடத்தப்படும் சர்வசனவாக்கெடுப்பில் இது தீர்மானிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டிருக்கிறது. இந்தியாவுடனான எமது பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாகும். அதிகாரங்களும் கணிசமான அளவு இல்லை. ஜனாதிபதி பூரண அதிகாரங்

## முறையான தேர்தல் நடந்தால் எமது பங்களிப்பும் உண்டு

களைக் கொண்டுள்ளார். மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன. மாகாண நிர்வாகம் எந்த நேரமும் கலைக்கப்படக்கூடியதாகவிருக்கிறது. அது ஒரு போதுமான யோசனை அல்ல.

நாம் வைத்து இருப்பது அல்லது அனுபவிப்பது அல்ல பிரச்சினை. நாம் அனுபவிப்பதற்கு சர்வதேச அங்கீகாரம் பெறுவதுதான் எங்களின் தேவையாகும். அதுதான் எமக்கு முக்கியமானது. ஒரு தனிநாடு போன்ற நிர்வாகத்தை இங்கு நாம் நடத்தலாம். ஆனால் அதற்கு இலங்கை, இந்தியா மற்றும் உலக நாடுகள் அங்கீகாரம் வழங்குவதுதான் எமக்கு முக்கியமானதாகும்.

அரசியல் தீர்வு ஒன்றில், பிராந்திய சுயாட்சி அல்லது சுயாட்சி அரசாங்கம் ஒன்று அரசமைப்பினால் உத்தரவாதம் செய்யப்பட்டு அது சர்வதேச சமூகத்தினால் அங்கீகரிக்கப்படுவதைத் தான் நாம் கணிசமான அளவு என்று அழைக்க முடியும்.

### நம்பிக்கை அளிக்கிறது

கேள்வி: சமாதான முயற்சி

## 19 பொலீஸாரும் 20 படையினரும் இன்னும் எமது காவலில்

குறித்து எந்தளவு நம்பிக்கையாக இருக்கிறீர்கள்?

பதில்: அது உற்சாகத்தைத் தருகிறது. 17 ஆண்டு கால தவறான ஆட்சியின் பின்னர், பேச்சுவார்த்தைக்கு உண்மையான விருப்பத்தையும் சாதகமான பிரதிபலிப்பையும் தெரிவிக்கும் புதிய அரசாங்கம் வந்துள்ளது.

இராணுவம் மற்றும் தென்னிலங்கையில் உள்ள பேரினவாத சக்திகளினால் பிரச்சினைகள் வரும் என்றாலும் இச்சமாதான முயற்சி வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. சமாதான பாதையில் செல்வது என்று சந்திரிகா உறுதி பூண்டுவிட்டதாகத் தெரிகிறது.

### ஜனாதிபதி தேர்தலும் சமாதான முயற்சியும்

கேள்வி: சமாதான முயற்சிகள் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடையது என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

பதில்: ஜனாதிபதித் தேர்தல் முக்கியமானதாகும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பும் எவரும் இராணுவத்தைக் கட்டுப்படுத்தவும் அரசமைப்பில் மாற்றங்களைச் செய்யவும் போதுமான அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும்; மற்றும் தீர்மானங்களை எடுக்கும் பூரண அதிகாரமும் அவர் பெற்று இருக்க வேண்டும்.

சந்திரிகாவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களே உள்ளன. நாடாளுமன்றத்தில் அவருக்குப் பெரும்பான்மை இல்லை. சிறுபான்மை வாக்குகளில் அவர் தங்கியுள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான இன்னொரு அரசு தனி அதிகாரங்களைக் கொண்டு இயங்குகிறது. ஆகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முக்கியமானது என்று நான் கருதுகின்றேன். இப்பிரச்சினையைத் தீர்க்க ஸ்திரமான அரசாங்கம் ஒன்று எமக்குத் தேவைப்படுகின்றது. சந்திரிகாவுக்கு ஸ்திரமான அரசாங்கம் ஒன்று தேவை; இல்லாவிடில் அவர் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண கஷ்டப்படுவார்.

### பிரச்சினையைத் தீர்க்க நாடாளுமன்று தவறியது

கேள்வி: பூர்வாங்கப் பேச்சுகளின்போது, வடபகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது பற்றி அரசு கருத்து வெளியிட்டால் நீங்கள் ஒத்துழைப்பீர்களா?

பதில்: எந்த யோசனையையும் நாம் நிச்சயம் பரிசீலிப்போம். ஆனால் தேர்தலை நடத்த அனுமதிப்போம் என்பது குறித்து சாதகமாக என்னால் சொல்ல முடியாது. இனப்பிரச்சினை தீர்க்கப்படும் வரை எந்த ஜனநாயக நடைமுறைகளிலும் நாம் பங்குபற்ற மாட்டோம் என்று எப்போதும் நாம் கூறிவந்துள்ளோம். எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண 40 ஆண்டுகளாக நாடாளுமன்றம் தவறிவிட்டது.

எமது மக்களுக்கு எதிரான பாரபட்சமான சட்டங்கள் எல்லாம் கொண்டு வரப்பட்டதற்கு நாடாளுமன்றமே பொறுப்பு என்று பிரபாகரன் கூறியுள்ளார். ஆகவே நாடாளுமன்ற முறை எமது பிரச்சினைக்குத் தீர்வு காண தவறிவிட்டது.

### முட்டுக்கட்டை வரலாம்

கேள்வி; சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டைகள் ஏதும் இருக்கும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

பதில்; எப்போதும் அச்சாத்தியம் உண்டு. அரசியல் தரப்பில் இருந்து மட்டுமல்ல, மதவாத சக்திகளிடமிருந்தும் அச்சாத்தியம் உண்டு.

சமாதான முயற்சிகளுக்கு சரித்திர காலந்தொட்டு முட்டுக் கட்டையாக தென்பகுதியில் பலம்வாய்ந்த பேரினவாத சக்தி ஒன்று இருந்து வருவதை மறுக்க முடியாது.

தெற்கில் சிங்கள உணர்வு மாறுகிறது. பேரினவாத அரசியலுக்கு இனியும் வாக்களிக்கத் தயாராக இல்லை என்பதை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள மக்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இருந்தும் இச் சக்திகள் மதம் மற்றும் துறைகளில் செயல்படுகின்றன. ஆனால் சிங்கள மக்கள் இனியும் இதனை அனுமதிக்கமாட்டார்கள். இராணுவம் இருக்கிறது. காரணம் இராணுவ இயந்திரம் பலமிக்கதாக உள்ளது. குறிக்கோள்களை அவர்களுக்கு முறையாகத் தெரிவிக்கவில்லையானால் இராணுவமும் முட்டுக் கட்டையாக வர முடியும்.

கேள்வி: சிங்களமக்களுடன் உறவை கட்டி எழுப்புவதற்கு எப்படி எண்ணியுள்ளீர்கள்?

பதில்: சாதாரண சிங்கள மக்களை விடுதலைப் புலிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ தேசாபிமானம் தொக்கி நிற்கும் நூல்

## "வீடு" வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 19

"தமிழீழ தேசாபிமானம் "வீடு" நூலில் உள்ள ஒவ்வொரு சிறுகதையிலும் தொக்கி நிற்கிறது."

"இளையவன்" எழுதிய "வீடு" சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் தலைமை வகித்து உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பொறுப்பாளர் திரு. சு. ரவி இவ்வாறு கூறினார்.

கடந்த 16 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் விழா நடைபெற்றது.

திரு. ரவி மேலும் கூறியதாவது:

போராட்ட இலக்கியம் படைக்க வருமாறு எழுத்தாளர்களைக் கேட்கும் போது ஒரு குறிக்கப்பட்ட கருத்துக்கு அப்பால் வேறு எதையும் வைக்க முடியாதென்று எழுத்தாளர்கள் கூறுகிறார்கள், ஆனால் இங்கே ஒவ்வொரு நிகழ்வுகளும் திறமையாகக் கையாளப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறுகதைகளும் சாதாரண வழமையான கருக்களுக்கு அப்பால் போராட்ட காலத்தை ஒட்டிய அதில் கிடைத்த அனுபவங்களைக் கொண்ட நுண்ணிய கருத்துக்களைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது என்றார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை விழாவில் பேசும் போது கூறியதாவது:

வெளியில் இருந்து வரும் பத்திரிகை சஞ்சிகையாளர்களைச் சந்தித்து தங்கள் படைப்புக்களை வெளியிட பலர் இன்று கொழும்பு ஈறாக அலைகிறார்கள். திடீரென்று யார் யாரையோ எல்லாம் தேசியத் தலைவர்களாகக் காணத் தொடங்கி விட்டனர். ஆனால் எந்த நிலையிலும் மிகவும் நேர்மை வழியில் நின்று சிறந்த சிறுகதை இலக்கியத்தைப் படைத்து எமது மண்ணிற்குத் தொண்டாற்றியுள்ளார் இளையவன். இவ்வாறு அவர் கூறினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. த. கலாமணி, க. சட்டநாதன், நூலாசிரியர் இளையவன் ஆகியோரும் பேசினார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. வே. பாலகுமாரனிடம் இருந்து நூலின் முதல் பிரதியை 'ஈழநாதம்' ஆசிரியர் திரு. பொ. ஜெயராஜ் பெற்றுக் கொண்டார். சிவஸ்ரீ கை. நாகேஸ்வரக்குருக்கள் அருட்திரு. செல்வரத்தினம் அடிகளார் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்

(சு-111)

## பூநகரிப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சரவைக் கூட்டத்துக்கு மாற்றுக் கட்சியான ஐ. தே. கவைச் சேர்ந்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமை வகிப்பதால்—

இரகசியம் பேணப்பட வேண்டிய அம்சங்களை அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வதைத் தவிர்த்து—

அதற்கு முன்னர் தனியாக பிரதமர் தலைமையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் ஒன்று கூடி அந்த விடயங்களை ஆராய்வது வழக்கம் என்பது தெரிந்ததே.

அந்த வகையிலேயே —

பூநகரிப் பாதையைத் திறப்பது குறித்து அமைச்சர்கள் நேற்று கூடி ஆராயவிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவையின் முடிவு இன்று மாலை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-எ-6)

# இனப்பிரச்சினைக்குத்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கவில்லை என்று பிரபாகரன் சிங்கள மக்களுக்கு தெரிவித்துள்ளார். பேரினவாதிகளை சிங்கள மக்கள் அடையாளம் கண்டு, ஒதுக்க வேண்டும். அதுவே நிரந்தர சமாதானத்துக்கு இட்டுச் செல்லும்.

அரசின் நடவடிக்கைகளுக்கு நாம் சாதகமாக செயல்பட்டு வருகின்றோம். பத்துப் பொலீஸாரை விடுதலை செய்தோம். பூர்வாங்கப் பேச்சுக்கு எமது சார்பில் 4 பிரதிநிதிகளை நியமித்தோம்.

பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்காக தொடர்ந்தும் சாதகமாகச் செயல்படுவோம். போர் நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்வதில் அரசு வெற்றியீட்டுமானால் அது நிரந்தரமான விளைவு ஒன்றை ஏற்படுத்தும். அரசு மேலும் சென்று, பாதுகாப்பான போக்குவரத்துக்கு பாதை ஒன்றை திறந்தால் அது மக்களால் பெரிதாக பாராட்டப்படும். ஆகவே அரசாங்கம் இன்னும் கூடுதலாக செயல்பட பல வழிகள் உள்ளன.

### வடக்கு - கிழக்கு தேர்தல்

கேள்வி: வடக்கு கிழக்கில் நடந்த பொதுத் தேர்தல் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்: நியாயமற்ற தேர்தல் என்பது உலகுக்கே தெரியும். வடபகுதியில் ஒரு சிறு பகுதியினரே வாக்களித்தனர் கிழக்கு, இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆகவே சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடக்கவில்லை. விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளவில்லை. முற்றாகப் பார்த்தால் இது ஒரு மோசடியாகும். ஒரு லட்சம் பேர் அகதிகளாக இந்தியாவில் உள்ளனர். திருகோணமலையைச் சேர்ந்த 50 ஆயிரம் பேர் இங்கு அகதிகளாக உள்ளனர். இந்த அகதிகள் எல்லாம் சொந்த இடங்களுக்கு திரும்பிய பின்னர் தான் முறையான தேர்தல் நடத்த முடியும்.

இந்திய அமைதிப் படை, ஈ. பி. ஆர். எல். எப். ஆகியவற்றின் கீழும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

முறையான தேர்தல் நடத்தப்படும் என்று நாம் நம்புகின்றோம். நாம் பங்கு வகிப்போம்.

### தமிழ்க் குழுக்கள்

கேள்வி: ஏனைய தமிழ்க் குழுக்கள் பற்றிய உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்: நான் வெளிப்படையாகக் கூறவிரும்புகிறேன். சில தமிழ்க் குழுக்கள் அரச படைகளுடன் சேர்ந்து ஆயுதக் குழுக்களாக இன்னும் செயல்பட்டு வருகின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டுவிடுங்கள்; அது ஒரு சாந்தமான கட்சி (Pacifist Party)

புளொட், ஈ. பி. டி. பி., ரெலோ ஆகியன இலங்கை படைகளின் இராணுவ இயந்திரத்தின் ஒரு பகுதியாக, விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயல்படுகின்றன. விடுதலைப் புலிகளை அழிப்பது தான் அக்குழுக்களின் பொதுக் குறிக்கோள். இக்குழுக்கள் ஆயுதங்களைக் கைவிட்டு அரசியல் ஜனநாயக அமைப்புகளாக மாறும் வரை எமது அணுகுமுறையில் மாற்றத்தை ஒருவரும் எதிர்பார்க்க முடியாது. அப்படி அவர்கள் செய்தால் அவர்களுடன் பேசி, கலந்துரையாடி, ஒரு வித உடன்பாட்டுக்கு வருவதற்கு நாம் தயாராகவிருக்கின்றோம்.

கேள்வி: நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்து பதிவு செய்தீர்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அதனைக் கலைத்து விட்டீர்கள். அதனை மீண்டும் ஆரம்பிக்கும் எண்ணம் உண்டா?

தமிழ்ச்செல்வன்: அப்படி ஓர் எண்ணமும் எமக்கில்லை. அரசியல் நடவடிக்கைகளை எம்மிடம் உள்ள அரசியல் பிரிவு கவனித்து வருகின்றது. சமாதானம் ஏற்பட்டால் கூட, எமது தேவைகளை எமது அரசியல் பிரிவு கவனித்துக் கொள்ள முடியும்.

கேள்வி: போர்க் கைதிகளின் எதிர்காலம் என்ன?

பாலசிங்கம்: பத்துப் பொலீஸாரை விடுவித்துவிட்டோம். 19 பொலீஸாரும் 20 படையினரும் இன்னும் எம்மிடம் உள்ளனர். பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்பட்டால் எஞ்சிய 19 பொலீஸாரை விடுவிப்போம். படையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள எமது போராளிகளுடன் எம் காவலில் உள்ள இராணுவத்தினரை பரிமாற்றம் செய்ய முடியும். (இ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மானம், ரோஷம் என்று ஏதாவது ஹேமா, காமினிக்கு இருக்கிறதா?

## சந்திரிகா கேட்கிறார்

காமினி திஸநாயக்கா கட்சி விட்டுக் கட்சி மாறுபவர். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக குற்றவியல் மசோதாவைக் கொண்டு வந்தவர். "இனி நான் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரமாட்டேன்" என்று கூறிவிட்டு தற்போது அதில் மீண்டும் சேர்ந்து எதிர்க்கட்சித் தலைவராகி இருக்கிறார். அவருடன் ஹேமாவும் இணைந்து கொண்டு பிரசார மேடைகளில் ஏறி வருகிறார். இவர்களுக்கு மானம், ரோஷம், வெட்கம் என்பது கிடையாதா?

மருதானை, பஞ்சிகாவத்தையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு கேட்டார்.

இன்று அரசாங்கம் ஒரு கட்சியிலும் ஜனாதிபதி வேறொரு கட்சியிலும் இருப்பதால் எமது முற்போக்குத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. அதனால்த்தான் அரசாங்க சார்புக் கட்சியைச் சேர்ந்தவரே ஜனாதிபதியாக இருக்க வேண்டும்.

எமது நாட்டுக்குப் பெரும் சாபக்கேடாக இருக்கும் உள்நாட்டுப் போருக்கு முடிவொன்றைக்காண முடியும் என்ற திடமான நம்பிக்கை எனக்கு உண்டு. அதை எவ்வாறேனும் செய்து முடிக்க நான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன். எமது பேச்சுவார்த்தைகள் உடனடியாக வெற்றி பெறாது போனாலும் நாளடைவில் சுமுகமான தீர்வு ஒன்று கிட்டியே தீரும்.

இப்படி சந்திரிகா மேலும் கூறினார். [இ]

# முஸ்லிம் விவகார திணைக்களத்தை அஷ்ரப்பிடம் ஒப்படைக்க. இணக்கம்

## சந்திரிகாவுடன் அலரி மாளிகையில் சந்திப்பு

கொழும்பு, ஒக். 19

முஸ்லிம் விவகார திணைக்களத்தை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரபின் கீழ் கொண்டு வருவதற்கு பிரதமர் சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அஷ்ரபும் சந்திரிகாவும் கடந்த ஏழாம் திகதி அலரி மாளிகையில் சந்தித்து இரு கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்ட வேறுபாடுகள் குறித்து பேசியதை அடுத்தே இந்த இணக்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. முஸ்லிம் காங்கிரஸ் சிபார்சு செய்பவர்களையும் ராஜதந்திரிகளாக நியமிக்கவும் பிரதமர் இணங்கினார் என்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இணக்கம் காணப்பட்ட விஷயங்களை அமுல் நடத்துவதாக பிரதமர் உறுதியளித்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

## கட்சி மாறும் தவளை அல்ல என்கிறார் சஜித்

கொழும்பு, ஒக், 19

ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்குப் பாயும் தவளை என்று என்னை எண்ணிவிட வேண்டாம். காமினி திஸநாயக்கா ஜனாதிபதியாக வந்து பிரேமதாஸாவின் கொள்கைகளை அமுல் நடத்துவார்.

சஜித் பிரேமதாஸா முன் கண்டவாறு தெரிவித்தார்.

திஸ்ஸமகாரம வாடி வீட்டில் வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-எ)

## சாவகச்சேரி இந்து பரிசளிப்பு

சாவகச்சேரி, ஒக். 19

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசில் நாள் இன்று புதன் முற்பகல் 9 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. க. சந்திரசேகரா தலைமையில் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம அதிதியாக, யாழ். பல்கலைக்கழக பதிவாளர் க. பரமேஸ்வரனும், சிறப்பு அதிதிகளாக தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கமும், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ப. தமிழ்ச்செல்வனும் கலந்து கொள்வர். (உ-31- 17)

## தவறான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கே. கரிகாலன் மீனவர் விடுவிப்பு வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இப்படியான விடயங்களில் அரசு கவனமாகச் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடற்புலிகளின் நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. மாறன் பேசுகையில்—

அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தால் கைதாகிறார்கள். கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்களைச் சந்திக்கச் சென்றால் சிறைக்கூடத்தில் தான் சந்திக்கவேண்டும்.

ஆனால் நாம் இந்த மீனவர்களை எந்தவித சித்திரவதைகளுக்கும் உட்படுத்தவில்லை. இவர்களை மீனவ நண்பர்கள் சங்கமே பராமரித்து வந்தது.

இவர்களை நாங்கள் எங்கள் சகோதரர் போலவே நடத்தி வந்தோம். இதை அரசுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்றார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரி பேர்கின்ஸ் பேசுகையில்—

செஞ்சிலுவைச் சங்கம் ஒரு பேச்சு நடத்தும் ஸ்தாபனம் அல்ல என்றும், நடு நிலையாளர்கள் என்ற ரீதியிலேயே இவற்றில் கலந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

கைதிகளின் விடுதலையில் மட்டும் அல்ல அவர்கள் மனிதாபிமானமாக நடத்தப்பட வேண்டும் என்பதிலும் நாங்கள் கவனமாக இருக்கிறோம் என்றும் அவர் கூறினார். (இ-9)

## தனியார்துறை ஊழியருக்கு ஓய்வூதியம்

தனியார்துறை ஊழியருக்கும் கூட்டுத்தாபன ஊழியருக்கும் ஓய்வூதியம் வழங்க அரசாங்கம் ஆலோசித்து திட்டம் வகுக்கிறது என்று தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இத்திட்டம் அமுலாகினால் 45 லட்சம் தொழிலாளர்கள் நலன் பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

தனியார் துறைத் தொழிலாளருக்கும் மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார். (க)

## பேச்சு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்தது. அந்த ஸ்ராண்டின் ஆறு பக்கங்களிலும் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

"மாநாட்டு மண்டபத்தில் இருதரப்பினரின் சம்மதத்துடன்தான் கொடிகளோ அல்லது வேறு சின்னங்களோ வைக்கப்படவேண்டும் என்பதால், இச்சம்பவத்தை கெட்ட அறிகுறியாக நாம் எடுக்கின்றோம்" — என்று எழுதப்பட்டுள்ளது.

அரசுப் பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் விஷயம் தெரியாதவர்கள் என்ற காரணத்தால் விடுதலைப்புலிகளின் கொடி "தமிழீழத்தின் கொடி" ஆக விடுதலைப்புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

பல நாடுகள் பங்குபற்றும் சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றும் நாடுகளின் தேசியக் கொடிகள் சமமான முக்கியத்துவத்துடன் பறக்கவிடப்படுவது அடிப்படை அம்சமாகும்.

விடுதலைப் புலிகளை போராளிக் குழுவாக மட்டுமே அங்கீகரிக்க முடியும் என்பதால், மாநாட்டு மண்டபத்தில் கொடி எதனையும் வைக்கவேண்டிய தேவையே இல்லை. ஆனால் விடுதலைப் புலிகள் தமது கொடியை பறக்கவிட்டதன் மூலம், ஈழம் கொடியை இலங்கை அரசின பிரதிநிதிகள் அங்கீகரித்துள்ளனர் என்று காட்டக்கூடிய நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.

இறைமையுள்ள பிரிட்டன் அல்லது இந்தியா ஆகிய நாடுகள் ஐரிஷ் அல்லது காஷ்மீர் போராளிகளுடன் பேச்சுகள் நடத்தும்போது மாநாட்டு மண்டபத்தில் போராளிக்குழுவின் கொடிகளை வைத்துத் தான் பேச்சுவார்த்தை நடத்துமா என்பதைப் பிரதமர் கண்டறியவேண்டும்.

பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற அரசுப் பிரதிநிதிகளின் இந்த முட்டாள்தனமான நடவடிக்கை குறித்து அனைத்து இலங்கையருக்கும் விளக்கம் கொடுக்க அரசு [illegible]

—இவ்வாறு அந்த ஆசிரியர் தலையங்கம் [illegible] டுள்ளது. (உ-எ)

## சித்த வைத்திய நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 19

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்தின் விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக இம் மாதம் முதலாம் திகதி துணுக்காய் பாண்டியன் குளம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் வவுனிக் குளத்தில் சித்த வைத்திய சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று இம் மாதம் மூன்றாம் திகதி பூநகரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் கிராஞ்சி என்ற இடத்திலும் சித்த வைத்திய சேவை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

ரி. ஆர். ஆர். ஓ நிறுவனம் ஜேர்மன் சமஷ்டிக்குடியரசு உதவித்திட்டத்தின் கீழ் நடத்திய நான்கு தொழிற்பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 15- 10- 94 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு ரி. ஆர். ஆர். ஓ உரும்பிராய் காரியாலயத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் திட்டப்பணிப்பாளர் செ.பத்மநாதன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்ள உடுவில் பிரதேச செயலர் ஆ. பத்மநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இவ் வைபவத்திற்கு ரி.ஆர்.ஆர்.ஓ நிறுவன உபதலைவர் அ. நல்லதம்பி தலைமை தாங்கினார்.

இங்கு விவசாய பயிற்சி நெறியில் பங்கு பற்றிய 16 மாணவர்களுக்கும், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறியில் பங்கு பற்றிய 24 மாணவர்களுக்கும், தட்டச்சு இயந்திரம் திருத்தற் பயிற்சி நெறியில் (பெண்களுக்கான) பங்கு பற்றிய 17 மாணவர்களுக்கும், பனம் பொருட் கைப் பணி பயிற்சி நெறியில் பங்கு பற்றிய 10 மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இதில் 10 மாணவர்களுக்கு விசேட சித்தியெய்தியமைக்காக பரிசில்களும் வழங்கப்பட்டன.

## காமினி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்குஇணங்க லஞ்ச, ஊழல்களை விசாரிப்பதற்கான ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள், ஒழுங்கீனங்கள் குறித்து விசாரிப்பதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா அறிவித்துள்ளார்.

(உ-எ-10)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம்

கந்தபுராண வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம் கொழும்பில் 17- 10- 94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (இராசம் மோட்டார் ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும், பிரபாஸ்கரன், பிரேமரஞ்சினி, பவானி, ஜெயகௌரி, சரவணபவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், க.தியகராஜாவின் மைத்துனியும், உதயகுமார், பிரேமகுமார் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
சு, பிரபா
(மகன்)

12. கந்தபுராண வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

(33410)

## திருமதி மாணிக்கம் நாகம்மா

கொக்குவில் கிழக்கு, வளாக வீதியைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் நாகம்மா 18. 10. 94 ல் காலமாகி விட்டார்.

அன்னார் மாணிக்கத்தின் மனைவியும், இராசரத்தினம், தியாகராசா (மக்கள் வங்கி காங்கேசன்துறை), சுந்தரலிங்கம் (பணிப்பாளர் வர்த்தக அமைச்சு வெளிநாட்டுச் சேவை), திருமதி தவமணிதேவி துரைசிங்கம், சிவபாதம் (லண்டன்), ராஜு (ஓமான்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பார்வதி மற்றும் கோமதி, ரஞ்ஜினி (கொழும்பு), சு. துரைசிங்கம் (சாலைப் பரிசோதகர் இ. போ. ச. கோண்டாவில்), சூசான்மரி (லண்டன்), வசந்தாதேவி, ஆகியோரின் அன்பு மாமியாரும், யோகராசா, திருமதி ஷாந்தினி தேவி கமலேந்திரன், ரவீந்திரன் (ஜேர்மனி), இராசேந்திரன் (சுவிஸ்), ஹரிச்சந்திரன், சிரேந்திரன், திருமதி சுஜாதா ராஜ்மோகன், திலீபன், காண்டீபன், கீதாஞ்சலி, ஜனகன் (லண்டன் , ரமணன், டேவிற்சன் (லண்டன்), சமந்தா (லண்டன்), ரஜிக்காந்த், ஜீவகாந்த், இந்துயாழினி, சுமங்கல்யா, ஹர்ஸ்வினா, டிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (19. 10. 94) இன்று நண்பகல் 12 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. தியாகராசா
[மகன்]

வளாக வீதி,
கொக்குவில்.

(33404)

## மயில்வாகனம் இளையதம்பி

(முன்னாள் தபாலதிபர்)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த மயில்வாகனம் இளையதம்பி காலமானார்.

இவர் காலஞ்சென்ற மயில்வாகனம்-வள்ளியம்மையின் அன்புப் புதல்வரும், நவமணியின் அன்புக் கணவரும், சிவபாதசுந்தரம், மகேஸ்வரன், துரைச்சாமி, திருநாவுக்கரசு (UK), இந்திரா, இராசராணி ஆகியோரின் சகோதரரும், செல்வத்துரை இராஜேஸ்வரி, செல்வானந்தம், சோதிலிங்கம் தெய்வமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19-10-94) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
இ. நவமணி
(மனைவி)

நாவலடி,
கோப்பாய் தெற்கு.

(33414)

## திருமதி றெஜினா மனோன்மணி சூசைதாசன்

யாழ்ப்பாணம் இல. 834, ஆஸ்பத்திரி வீதியில் வசித்தவரான திருமதி றெஜினா மனோன்மணி சூசைதாசன் அண்மையில் அமெரிக்காவில் காலமானார்.

இவர் L. B. சூசைதாசனின் அன்பு மனைவியும், நீரா, ஷெறோன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இலங்கை யோண்பிள்ளை, இராசேந்திரம் யோன் பிள்ளை, ருக்மணி செல்வராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் அமெரிக்காவில் நடைபெற்றது.

தகவல்:
இலங்கை யோண்பிள்ளை

6/1, ஜெயவர்த்தனா இடம்,
ஹில் வீதி,
தெகிவளை

(33411)

## திருமதி பெர்னதேத்தம்மா செபமாலை

மண்டைதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ். பிரதான வீதி, தேசிய சேமிப்பு வங்கிக் கட்டடத்தில் வசித்து வந்தவருமான திருமதி பெர்னதேத்தம்மா செபமாலை நேற்று இரவு காலமானார்.

இவர் யோசப் செபமாலையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செபரெட்ணம், அற்புதம், காலஞ்சென்ற தோமஸ் அம்மா, காலஞ்சென்ற நீக்கோதேயு, ஓற்ரம்மா, ஸ்ரீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராசன், வனசா, எலியாஸ், லைசா, அன்ரனி, யான்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னராசா, நித்தியராணி, யேசு, காலஞ்சென்ற ஜெயசீலி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 19 - 10 - 94 புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்சீலன்

தே சே. வங்கிக் கட்டடம்,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(33416)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org